செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௫, மார்கழி	பரல்
உ௯	சனவரி, 1955.	௫

குன்றக்குடி அடிகளார் எழுந்தருளல்

குன்றக்குடி அடிகளார் சிவத்திரு. அருணாசல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தமிழ்நாடெங்கும் காலிற் சென்று செம்பொருட்டுணிவாம் சித்தாந்த சைவத்தைத் தொன்மைச் சான்றோர் பரப்பிய நன்முறைவழியே பரப்பிவரும் திருத்தொண்டு நானிலம் அறிந்து நகையும் உவகையும் கொள்ளும் நற்றொண்டென்பது யாவரும் போற்றிப் புகழும் பொருவில் மொழியால் உணரலாம். அம்மட்டோ 'அருள்நெறித் திருக்கூட்டம்' எனும் மாப்பெரும் கழகம் ஒன்றைத் தம் திருமடத்தமைத்து அதன் கிளைகளாக நூற்றுக்கணக்கான கழகங்கள் தமிழ்நாடெங்கணும் நிறுவப்பெற்று நிகழ்ந்துவருகின்றன. அவற்றின் பொருட்டுச் செய்தித்தாள்களும் வெளியீடுகளும் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றின் சார்பாக தந்நேரனைய புலவரும் பொன்னேரனைய அன்பரும் அறிஞரும் ஆங்காங்குச் செந்தமிழையும் சிவநெறியையும் விரிவுரை வாயிலாகப் பரப்பிவருகின்றனர்.

அவ்வுரிவுரை கேட்டு உளந்திருந்து முயர்வெய்தி உண்மையுணர்ந்து நன்மை கடைப்பிடித்து நல்வாழ்வு எய்தி வருகின்றவர் பலராவர். செல்லும் இடங்களில் எல்லாம் நிகழும் நிறைகுடம், விளக்கு, பல்லாண்டு, பாராட்டு, பூமாலை, புலமாலை, தோரணம், காவணம், பல்லியம், திருவுலா, திருமுறை முழக்கம், திருவடிவிளக்கம், அண்ணலார் அடியார்க் கமுதூட்டல், புலவர்ப் போற்றல் முதலிய சீர் சிறப்புக்கள் எண்ணில. காலிற் செல்லுதல் உருளை பூட்டிய ஊர்தியிற் செல்லுதல். கால்—உருளை. இக்காலத்துக் கேற்றவாறு இதனை நிலப்பொறி யூர்தி என்ப.

காலிற் செல்வதுபோல் கலத்திலும் சென்று இலங்கை யாழ்ப்பாணம் முதலிய கடல் கடந்த நாட்டிலும் செந்நெறியை அடிகளார் மலர்ந்த முகத்தாலும் கனிந்த மொழியாலும் துணிந்த வுளத்தாலும் பரப்பிவந்தனர். அடிகளார் அகங்கவர்ந்த அன்புமறை திருவாசகமாகும். திருவாசகம் முனிவர் மொழியல்லவா! கிறித்துவ முனிவராம் போப் ஐயரவர்களையும் யாழ்ப்பாணத்துக் கிறித்துவ ஐயர் கிங்ஃச்பரியவர்களையும் விடாது ஓதச்செய்யும் விழைவை உண்டாக்கியது அவ்விழுத்தவ நூலல்லவா? எனவே திருக்குறள் போன்று திருவாசகமும் உலகப் பொதுமறையே யாம்.

அடிகளார் தம் திருமுறைப் பற்றும், உணர்ந்த உண்மையை எண்மையாக உலகிடைப் பரப்பும் உறுதியும் உரனும் செந்நெறிச் செல்வர்களுக்கெல்லாம் சிறந்த எடுத்துக் காட்டாகும். நால்வர் பெருமக்கள் 'மாதவஞ்செய் தென்திசை வாழ்ந்திட' அருளால் தோன்றினர். 'தீதிலாத் திருத்தொண்டத் தொகை' முதலிய திருமுறை அருளினர். அம் முறையினாலேயே திருக்கோவில் வழிபாடுகள் சிறக்கச் செய்தல் வேண்டும் என்பது அவர்கள் திருவுள்ளம். 'அஃது அருச்சனை பாட்டே யாகும்' என்னும் அருண்மொழியால் ஐயுறவின்றித் துணியலாம். அருச்சனை—வழிபாடு. வழிபாட்டு உறுப்புக்களுள் ஒன்றாகிய தளிர் தூவிப் போற்றுதல் செந்தமிழ் மொழியிலேயே மக்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் திருமுறைத் திருமாமறை வழியாகச் செய்தல்வேண்டுமென்னும் குறிக்கோளுடன் "போற்றித்தொடர்" அமைத்துத் திருப்பதிகங்கள் அருளியுள்ளார்கள். அத்திருப் பதிகங்களைப்பாடித் திருக்கோவில்தோறும் அருச்சனை புரிந்து வந்த அரும்பெரும் வழக்கத்தை அயலவர் சூழ்ச்சி மயலால் கைவிட்டனர். இது திருமறைக்காடு வேதாரணியம் என வழங்குமாறு உட்பகையாய்த் திரித்த சூழ்ச்சி உண்மையினை உள்ளுற உணர்வார்க்கு வியப்பாகாது. இச் சூழ்ச்சி வலைப்பட்டுத் தாழ்ச்சியில் தயங்கிய நம்மனோர்க்கு உண்மையுணர்த்தித் திருமுறை முதலிய போற்றித் தொடர்களால் அருச்சனை செய்யும் வழக்கத்தை மீண்டும் புதிப்பித்த அருள்நிறை அறிவார் அன்பர்கள் சிலராவர். எனினும் திருமடமுதலிகள் யாரும் துணிந்து செய்யாத அவ்வரும் பணியை அடிகளாரே முன்புரிந்து வழிகாட்டியருளினர். அவர் தம் ஆணையில் திகழும் திருக்கோயில்களிலெல்லாம் இன்றும் தமிழ் அருச்சனையே நடைபெறுகின்றது. அதனால் பலரும் பலவிடங்களிலும் அந் நன்முறையினைப் பின்பற்றி அவ்வாறு செய்து போதருகின்றனர். அங்ஙனம் செய்வதற்குப் பெருங் காரணமாய் முன்னோர் பலர் உளரெனினும்

அவர்களெல்லாம் அடிகளார் போன்று திருமடமுதலிகளல்லர். அதனால் அடிகளார் காரணம் வலியுடைத்தென்க.

அடிகளார் இப்பொழுது மலேயா நாட்டுக்குச் செந்நெறி பரப்பும் நன்னோக்கத்துடன் செல்லுகின்றனர். அதன் பொருட்டு அடிகளார்க்குச் சென்னையில் பல்வேறிடங்களில் நடந்த வரவேற்பும் பாராட்டும் அளப்பில. அடிகளார் அவற்றின் பொருட்டு வழங்கிய வாழ்த்துரைகளும் அளப்பிலவே.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சிப்பொறுப்பாளர் திரு. வ. சுப்பையாபிள்ளையவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி 27-12-1954 திங்கட்கிழமை பகல் பதினொரு மணியளவில் கழகத்துக்கு அடிகளார் எழுந்தருளினர். ஆட்சிப் பொறுப்பாளர் மலர்மாலை யணிவித்து மிக்க சிறப்புடன் வரவேற்றனர். அச்சகம், அலுவலகம், விற்பனையகம் முதலிய பல்வேறு துறைகளையும் அடிகளார் திருக்கடைக்கண் சாத்தியருளினர். ஆங்காங்கு நிழலுருவப் படங்கள் எடுக்கப்பட்டன.

கழகப் புலவர் இராமநாதபிள்ளையவர்கள் அடிகளாரைப் பாராட்டிச் சிலவுரை புகன்றனர். சுருக்கம் வருமாறு:

அடிகளார் செந்தமிழுக்கும் சிவனெறிக்கும் செய்துவரு நற்றொண்டு முன்னையோர் கண்ட முதுமுறையே யாகும். ஓவா உழைப்பும், உளங்கனிந்து முகமலர்ந்து வளம்பெற மொழியும் இன்மொழியும், தகுதியறிந்து பாராட்டியூக்கும் பயனார் பண்பும் யாண்டும் காணப்பெறாது அடிகள் மாட்டே காணப்படுதல் 'ஒன்னார் விழையும் சிறப்பாகும்.' இத்தகைய இடையறாத் திருத்தொண்டால் அடிகளார் உடல் நலிவுற்ற காலத்தும் உளம் நலிவுறாது தொண்டினையே பெரிதும் ஓம்பிவந்தமை உலகறிந்ததொன்றே. முழுமுதற் கடவுளால் இத்தகைய மெய்யடியார்கட்கு இடையிடையே அருளாய்வு நிகழ்வது இயற்கையே. அங்ஙனம் நிகழ்ந்தால்தான் 'முட்டின்றிச் செய்யும்' முறை விளங்கும். அடிகளார் இங்கு எழுந்தருளி இன்முகம்தந்து நன்மையுற ஆட்கொண்டமைக்கு என்றென்றும் கடப்பட்டுள்ளோம். அடிகளார் நலம்பெறுவது அன்பர்கள் நலம்பெறுவதாகும். அடிகளார் மேற்கொண்டுள்ள திருத்தொண்டும் திருவுளக் கருத்தும் இறையருளால் முறையுற ஓங்கவும், அடிகள் நீடூழி வாழவும் அம்பலவாணன் அடியிணையே இறைஞ்சுவோமாக என்பதே. இதனைத் திருச்செவிசாய்த்து அடிகளார் புகன்றருளிய திட்பநுட்பம் செறிந்த பண்பமைந்த அருண்மொழி வருமாறு:

அடிகளார் அருண்மொழி: "கழகத்தார் என்னைச் சிறப்பாக வரவேற்றமைக்குப் பெரிதும் நன்றி. பொதுவாகக் கழகத்தாரும் சிறப்பாக ஆட்சிப் பொறுப்பாளர் திரு. வ. சுப்பையாபிள்ளையவர்களும் செய்துவரும் அரும்பெரும் தொண்டும் முயற்சியும் நனிமிகப் பாராட்டற் குரியன. பொதுவாகச் செந்நெறிச் செல்வர்களும் சிறப்பாகத் திருமடத்து முதலிகளும் திருமுறைக்கும், சித்தாந்தத்துக்கும், செந்தமிழ் நூற்களுக்கும் அவை எங்கணும் விளங்கி எல்லாரும் ஓதி இன்பவாழ்வு எய்திப் பயனுற நல்ல முறையாக வெளிவரத் துணைபுரிந்து சிவபுண்ணியப் பேறெய்தும் பெருங்கடப்பாடுடையவர்களாவர்.

"அவர்கள் அக் கடப்பாட்டினை மறந்து அந் நூற்களைக் காணவும் கூடுமோ என்று மெய்யன்பர்கள் அலமந்து அல்லலுறுங் காலத்துக் கழகத்தார் தோன்றி அந் நூற்களைச் செவ்விய முறையில் அச்சிட்டதுமன்றிக் கண்கவர்வனப்பினதாய்த் கையினுக்கு அணியாய் வெளிநாட்டவரும் விழையும் வண்ணம் நல்ல அழகிய உறுதியாய உயர்ந்த பல்வேறு வகையான கட்டடங்களோடு பல்வேறு வடிவிலும் வெளியிட்டுப் பலரும் பயனுறச் செய்தனர்; செய்து வருகின்றனர்; வருவர். இவ்வரும் பெரும் பணியினைத் தமிழுலகம் என்றும் மறவாது நன்றிபாராட்டும் என்பதில் எட்டுணையும் ஐயமின்று.

"திருமுறை மாநாடு, சித்தாந்த மாநாடு, குறுந்தொகை மாநாடு, நெடுந்தொகை மாநாடு, கலித்தொகை மாநாடு போன்ற சங்க நூற்களின் மாநாடுகளும் சித்தாந்த வகுப்புக்களும் நல்ல முறையில் அவ்வப்போது இன்றியமையாப் போழ்தில் செய்து சிறப்பித்துள்ளனர். உண்மை நெறியில் ஒல்லும்வகை ஓவாது பாடுபட்டுவரும் இவர்கட்கு உடையான் திருவருள் என்றென்றும் உடனாய் உதவி வருகின்றது. என்னால் செய்யப்பட்டு வரும் சிறுதொண்டினை மிகவும் பாராட்டிப் பேசினர். அஃது என்னை அத்தொண்டில் மேன்மேல் ஊக்குவிக்கும் அன்புரையேயாகும். யானும் உங்களில் ஒருவனாய் நீங்கள் செய்யும் செந்நெறித் தொண்டினில் வேண்டும்போதெல்லாம் உடனாய்க் கலந்து பணியாற்றும் கடப்பாட்டினேன். எல்லா வகையாலும் மெய்ம்மையும் முதன்மையும் பொதுமையும் ஒருங்கமைந்த நம் செந்தமிழ் நன்னெறி உலகெலாம் ஓங்க நாம் பாடுபடுதல் வேண்டும். சிறப்பாக மேல்நாடுகள் சென்று பரப்புவதே இற்றைஞான்று நம் முன்னிற்கும் இன்றியமையாப் பெரும்பணி. அதற்குச் செந்தமிழும் ஆங்கிலமும் சிறப்புறக் கற்றுப் பிறமொழியும் வல்லராய்ப் புலனடங்கியார் புலவரெனப்படுவர் என்னும் பொன்மொழிப் பண்பினராய், ஒழுக்கநெறி வழுக்கா விழுத்தவ

உள்ளத்தராய்ப் பிறர்க்கென வாழும் பெற்றிசேர் நல்லிளைஞர் பலர் வேண்டும். உங்கள் பேரன்புக்கு என்றும் கடப்பாடுடையேன். மீட்டும் உங்கள் அனைவர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றி'' என்று முறுவல்பூத்த முகத்தினராய் அருளினார்கள். யாவரும் திருவடிபணிந்து அருட்கொடைத் திருவெண்ணீறு பெற்று அணிந்து இன்புற்றனர்.

ஆட்சிப் பொறுப்பாளர் அவர்கள் நன்றி கூறுமுகத்தாற் கூறிய இன்னுரையின் சுருக்கம் வருமாறு:

"அடிகளார் எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி இங்கு எழுந்தருளி அறவுரை பகர்ந்து தலையளி செய்தது நம் பெறும் பேறே யாகும். அடிகளார் எழுந்தருளிய இந்நாள் ஓர் பொன்னாளே யாகும். திருமடத்து முதலிகள் புறத்துப் போந்து காலத்துக் கேற்றவாறு திருத்தொண்டியற்ற வேண்டும் நன் முறையை முன்னின்று செய்து காட்டி உடனுக்கிய பெருமை அடிகளார்க்கே உரியது. அடிகளார் எவ்வகையான பாராட்டையும் இயற்கையிலேயே ஒரு சிறிதும் விழையாதவர்கள். எனினும் எங்கள் பேரன்பைப் புலப்படுத்துவதற்காக யாங்கள் செய்யும் இச் சிறப்பினை ஏற்றருளுகின்றனர். இது செந்தமிழ்க்கும் செம்பொருட்டுணிவாம் சித்தாந்த சைவத்திற்கும் அடிகள் வாயிலாக யாம் செய்யும் சீர் சிறப்பேயாகும். அவையனைத்தும் எங்களுக்கே பெருமை தருவன. அடிகளார் செல்லும் மலேயாச் செலவு, திருவருட்டுணையால் வெற்றி பெற விளங்குமாக. இஞ்ஞான்று தமிழகத்தைக் காட்டிலும் வெளிநாடு போந்து வாழ்ந்துவரும் செந்தமிழ் மெய்யன்பர்கள் செந்தமிழ்மாட்டும் சித்தாந்த சைவத்தின்மாட்டும் உண்மையான உளப்பற்றுக்கொண்டு உணர்ந்து உழைக்கின்றனர். தங்கள் தாய்நாட்டின்மாட்டும் ஆங்கு வாழும் தமிழ்மக்கள் மாட்டும் பேரன்பு பூண்டு ஒழுகிவருகின்றனர். தமிழகத்துள்ள செந்நாப் புலவர்களையும், சீர்சால் அடிகண்மாரையும் உவப்பொடு கண்டு அளவளாவ நாளும் நனிமிகு வேட்கையுடையராய் இருக்கின்றனர். அடிகளார்க்கு எல்லா நலனும் நெடு வாழ்நாளும் ஆண்டவன் அருள்வானாக. அடிகளார் மேற்கொண்டுள்ள திருத்தொண்டுகள் அனைத்தும் வீறுபெற்றுத் திகழ்வதாக. யாமும் அத்தொண்டுகளுக்கு வேண்டும் பணி புரிவோமாக."

மெய்யன்பர்கள் பொருள்சேர் பாராட்டுகளுக்கிடையே அடிகளார் விடையருளி விடைபெற்று வீறுதிகழப் புறப்பட்டருளினர். யாவர்களாலும் அன்புமுழக்கம் அகம் கனிந்து செய்யப்பெற்றன. வாழ்க அடிகளார்.

துடிசைகிழாரின்
பேராவியற்கை

பிறப்பு

திரு. துடிசைகிழார் அ. சிதம்பரனார் அவர்கள் திருத்துடிசையம்பதிக்கு உரியராய்க் கோயமுத்தூரில் சிறக்க வாழ்ந்து வரும் வேளாண் விழுக்குடியில் தோன்றியவர். தந்தையார் திருப்பெயர் திரு. அர்த்தநாரீச்சுர முதலியாரவர்கள் ஆவர். இவர்கள் திருவிற் கமைந்த உருவினர். நீண்டு வளர்ந்த தோற்றத்தினர். நீண்டு மலர்ந்த முகமும் கண்ணும் கூரிய மூக்கும், தாள் தோய் கையும் பரந்த மார்பும் பாங்குற அமைந்தவர். செந்தமிழும் ஆங்கிலமும் சிறக்கக் கற்ற சீரியர். தனித்தமிழ்ப்பற்றும் சித்தாந்த சைவத் திறனுணர் மாண்பும் ஒருங்குசேர்ந்து ஓர் உருவெடுத்தாற் போன்ற ஒண்மையர். பிற்காலத் தமைந்த இத்தகைய பண்பின் கொழுந்துபோல் வளர்ந்தனர்.

பணி

பாடிகாவற்றுறையாகிய போலீசுத் துறையில் அலுவல் பார்த்தனர். ஆங்கு ஆட்சியாளர்க்கும் நாட்டு மக்களுக்கும் நயனொடு நன்றி புரிந்த நற்பண்பினராய்த் திகழ்ந்தனர். அதற்குரிய காரணங்கள் செந்தமிழ்ப்பற்றுச் செந்நெறிச் செல்கை, சிவ வழிபாடு, நடுநிலை பிறழாமை போன்றவைகளேயாம். படிப்படியாக உயர்ந்து ஊர்காவல் வட்ட முதன்மையராய்த் (போலீசு சர்க்கிள் இன்ஃச்பெக்டர்) திகழ்ந்தனர். அத்தொழிலின் ஊதியம் என்று சொல்லப்படும் பென்சனும் பெற்று விளங்கினர்.

தொண்டு

பெருங்குடும்ப வாழ்க்கையிலிருந்து கொண்டே தனித்தமிழ்த் தொண்டினைச் சலியாது கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகத் துணிவுடன் நிகழ்த்தி வந்தனர். சிறந்த ஆராய்ச்சி வல்லுநர். சொற்களைத் தனித்தமிழ் ஆக்கமெனக் கூறுங்கால் பெரும்புலவர்களும் பெருவியப் பெய்துவர். ஆனல், பொருத்தமில்லையென மனமார மறுக்க உடன்படார். இவர்கள்தம் மெய்ம்மையான தனித்தமிழ்ப்பற்றும், சித்தாந்த சைவத் துறுதியும் இவர்கள் அவ்வப்போது ஆக்கி அளித்துள்ள கட்டுரைகளாலும் பொருள்பொதி நூற்பெருக்காலும் நன்குணரலாம். இவர்கள் நாடொறும் திருநீறிடுதல் சிவபூசை செய்தல் முதலிய சிவத்தொண்டினைத் திருமுறைத் திருமாமறை வழியாகவே செய்து போந்தனர். அந் நன்முறை உலகெலாம் பரவ வேண்டும் என்

னும் உண்மை உள்ளன்புடன் 'சிவபூசை விளக்கம்' என்னும் சீரிய தெளிவு நூலும் வெளிப்படுத்தி யுள்ளனர். தமிழ்மொழி யின் தனிப்பெரும் மாண்பினைக் 'கழகத் தமிழ் வினாவிடை' என்னும் இரு நூல்கள் நன்கு விளக்குவன. அதுபோல் ஆராய்ச்சி நுட்பத்தினைச் 'சேரர் வரலாறு' என்னும் செவ்விய நூல் ஆர்வமுடன் விளக்கும். ஒருசிலர் ஆராய்ச்சிக் காலம் ஆய்வுக்குப் பொருத்தமே எனினும் அறிவு வரம்பைக் கடந்து அதனை வரையும் மருட்டுகின்றதே என்பர். ஆராய்ச்சிகள் வரவரக் காலப்பழமையை ஒப்புக்கொண்டு கட்டுரைக்கின்றன என்பது சிந்து நதிப் பள்ளத்தாக்குப் புதைபொருள் ஆய்வாலுணரலாம்.

தூய்மை

எப்பொழுதும் அகம்புறம் தூயராய்த் திகழ்வர். நகை முக முடையராய்ப் பணிவும் இன்சொலும் பாங்குற அமைந்தவர். எவரொடும் செற்றம் நீக்கிய செம்மனத்தினர். சினமுதலகற்றி வாழும் சீலத்தர். சொல்லும் சொற்களைச் செம்மையுற அமைதியாய் ஆழ்ந்த கருத்துக்களுடனும் புன்முறுவலுடனும் புலங்கொளப் புகல்வர். 'திருமந்திர'த்துக்கு அரும்பெரும் குறிப்புரையொன்று எழுதியளித்துள்ளனர். அவர்களுடைய முழு எண்ணம் 'திருமந்திரம்' முழுவதுக்குமே விளக்கவுரை எழுத வேண்டும் என்பதே. அது நிறைவுறாமை தமிழ்நாட்டிற்கோர் பெருங்குறையே யாம். இவர்தம் உரைநுட்பங்கண்டே திருப்பனந்தாள் திருமடத்துத் 'திருமந்திர'ப் பதிப்பில் 'திருமந்திர வரலாறு' இவர்களால் வரையப் பெற்றிருப்பது காணலாம். அது 'திருமந்திரமணி' என்னும் இவர் சிறப்புப் பெயரை விளக்கும்.

ஆக்கிய நூல்கள்

கழகத் தமிழ் வினாவிடை (முதற் புத்தகம், இரண்டாம் புத்தகம்), கழகச் சைவ வினாவிடை (I. II.,) அகத்தியர் வரலாறு, தமிழ்ச் சங்கங்களின் வரலாறு, சேரர் வரலாறு, சிவபூசை விளக்கம், விபூதி விளக்கம், உருத்திராக்க விளக்கம், ஆனைந்து, திருத்துடிசைப்புராணம், திருமந்திரம் குறிப்புரையுடன்.

பேரா இயற்கை

எதிர்பாராத நிலையில் திடீரென 30-12-1954-இல் கோயமுத்தூர் தம் அரும்பெரும் இல்லத்துச் சிவனினைவுடன் ஆவி நீத்தனர். அவர்தம் அரும்பெறல் ஆவி சிவபெருமான் திருவடி நீழலில் என்றும் இன்புறுமாக. அவர்தம் குடும்பத்தார்க்கு எங்கள் உளமார்ந்த ஆறுதலும் பரிவும் உரியவாகுக.

துடிசைகிழார் மறைவு குறித்த

இரங்கற் பாக்கள்

[திரு. கோவைகிழார்]

தொண்டை நாட்டுத் தொல்வேள் குடியான்
பண்டைப் பனுவல் பலவும் பயின்றோன்
அண்டை அயலார்க் கவற்றை உரைப்போன்
சண்டை எனினும் சால்பை விடலான். (க)

துடிசைப் பதியின் தூய்மைக் கிழவோன்
குடிசை நிரம்பக் கூட்டும் நூலோன்
இடிசெய் கொள்கை இயம்பி வெல்வோன்
துடிசெய் உரைகள் தூவி வந்தோன். (உ)

கொள்கை எதையும் கொள்ளு முன்னர்
உள்கை ஆய்ந்தே ஊட்டும் நிலையான்
எள்கை அஞ்சான் எதையும் நிறுத்தோன்
ஒள்கை ஒன்றே உயர்வில் ஏற்போன். (ங)

தமிழின் தொன்மை தனித்த பெருமை
அமிழ்தின் முறையில் அமைந்த தென்போன்
'உமிழ்தும் பிறர்சொல் உரையை' என்றே
குமிழ்திண் மலர்போல் கொள்வோன் மொழியே. (ச)

இந்தப் பேற்றை இகத்திற் களித்த
எந்தம் கிழாஅன் எங்கே சென்றான்?
அந்தப் புலத்திற் கவன்செல் வழியே
சிந்தை கூரச் சென்று காண்போம். (ரு)

அந்தோ எங்கள் அருமைத் தமிழன்
சிந்தா குலத்தில் செலுத்தி, எமையே
எந்தாய் மலர்த்தாள் இசைந்தோ சென்றான்,
முந்தே சென்று முகமன் சொலவோ? (சு)

திருக்குறள் தண்டபாணி விருத்தியுரை

(சிலம்பு: உக, பரல் : ச, உஅக-ஆம் பக்கத் தொடர்ச்சி)

உலகம் என்னும் எழுவாய் வருவித்துரைக்கப்பட்டது. காட்சிக் கெளியனாதலாவது, முறை வேண்டினார்க்கும் குறை வேண்டினார்க்கும் எளிதிற் காணத்தக்க செவ்வியுடையனாதல். அதுவேயு மன்றி 'பிறந்த உயிர் தாயைக் கண்டு இன்புறுவது போலத் தன்னாற் காக்கப்படும் உயிர்வாழ் சாதிகள் தன்னைக் கண்டு இன்புறுதலின் தான் அவர்கட்குத் தன் உருக்காட்டு தற்கும், மாற்றரசர் ஒற்றுவந்தவிடத்து அவர் முன்னர்த் தனது ஊக்கங்காட்டுதற்கும்' குடிகள் காட்சிக்கு எளியனாய் உலாப் போதலுமாம். கடுஞ்சொல்ல னல்லன் எனவே இன்சொல்லன் என்பதாயிற்று. இன்சொலி னிலக்கணத்தை இனியவை கூறல் என அறப்பாலிற் போந்த அதிகார நோக்கிக் கண்டுகொள்க. நிலத்தை மீக்கூறும் எனவே அந் நிலத்தை யாளும் மன்னனை மீக்கூறல் சொல்ல வேண்டாதாயிற்று.

மாட்சியுடைய மன்னனுக்குப் புகழ் உரித்தாம் என்றது. (சு)

உலகமும் உரித்தா மென்பது வரூங் குறள் :

ருஅஎ. இன்சொலா லீத்தளிக்க வல்லாற்குத் தன்சொலாற்
றான்கண் டனைத்திவ் வுலகு.

(இ - ள்.) இன்சொலால் - இனிய சொல்லுடனே, ஈத்து - (பொருளை வகையறிந்து) கொடுத்து, அளிக்க வல்லாற்கு - (உலகைக்) காக்கவல்ல அரசனுக்கு, இவ்வுலகம் - இந்த உலகம், தன்சொலால் - தன் புகழோடு, தான் கண்டனைத்து - தானே படைத்தது போன்றதாம். (எ - று.)

(இ - து.) இன்சொல்லும் கொடையுமுடையனாய் உலகம் காக்கும் மன்னனுக்குப் புகழும் உலகமும் சொந்தமாம். (எ-ம்.)

இன்சொல் மேற் குறளிற் கூறப்பட்டது. வகையறிந்து கொடுத்தலாவது, கொடைக்குரியார்க்கும் பிறர்க்கும் அவரவர் தகுதியறிந்து கொடுத்தல். தான் காத்தல், தன் நாட்டிற் குடிகளும் பசு முதலிய விலங்குகளும் பயிர்களும், கேடுறாமற் பாதுகாத்தல். சொல் - புகழாதலை 'உரைப்பாருரைப்பவை' (உருஉ) என்னுங் குறளுரையிற் காண்க. சொலால் என்புழி, ஈரிடத்தும் ஆலுருபு உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது. காண்டல் -

இயற்றல். இஃது இப்பொருட்டாதல் 'உரைகண்டார்' என்னும் வழக்குப்பற்றி அறியப்படுமாறு முன்னர்க் கூறினும். (குறள்-). அவன் படைத்தது போலாதலாவது, அவன் விரும்பும் நலங்களெல்லாம் நிறையப்பெற்று அவன் ஆணைவழி நிற்றல். 'கண்டனைத்து - கருதிய அளவிற்றும்....கருதிய அள விற்றுதல் - கருதிய பொருளெல்லாஞ் சுரத்தல்' என்றார் பரி மேலழகர். வருங் குறள் நோக்கின் யாங் கொண்ட பொருள் சிறக்குமாறு காண்க.

மாட்சியுடைய மன்னனுக்கு இவ்வுலகந் தன்னாற் படைக் கப்பட்டது போலு மென்றதிது. (எ)

ஆதலின் அவன் கடவுளே போல்வன் என்பது வருங் குறள் :

ருஅஅ. முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்.

(இ - ள்) முறை செய்து - (தன் நாட்டை) முறைப்படி (ஆட்சி) செய்து, காப்பாற்றும் மன்னவன் -, மக்கட்கு - குடி களுக்கு, இறையென்று - கடவுளே போல, வைக்கப்படும் - (உல கத்தா ருள்ளத்து மதித்து) வைக்கப் படுவான்.

(இ - து.) செங்கோ லரசன் தெய்வமே போல்வன். முறை - அறம் பொருளின்பங்களாம் முறை. மன்னன் இறை யாதல் அதிகாரப் பொருள் விரிப்புழிக் கூறப்பட்டது. பிறப் பால் மக்களுள் ஒருவனே யாயினுஞ் சிறப்பால் இறையென வைக்கப்படுவா னென்றவாறு. 'பிறப்பொக்கு மெல்லா வுயிர்க் குஞ் சிறப்பொவ்வா - செய்தொழில் வேற்றுமையான்' (குறள் - கூஎஉ) என்பதாகலின்.

வேந்தனை இறை யென்ற திது. (அ)

இறையாமாறு கூறுவது வருங் குறள் :

ருஅகூ. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக் கீழ்த் தங்கு முலகு.

(இ - ள்.) செவி கைப்ப - (தன்) செவி வருந்த (தன் நன் மையைக் கருதி வெஞ்சொற் கூறும் துணையாயினார்), சொற் பொறுக்கும் - சொற்களைப் பொறுமையுடன் கேட்கும், பண் புடை வேந்தன் - நற்குணமுடைய அரசனது, கவிகைக் கீழ் - குடைநிழற் கண்ணே, உலகு தங்கும்-உலகம் தங்கும். (எ-று.)

(இ - ள்.) துணையாயினார் இடித்துரைக்கும் உரைகளைப் பொறுமையுடன் செவியேற்கும் அரசனது குடை நிழலில் உலகம் தங்கும். (எ - ம்.)

கைப்பு - நாவின் சுவை ஆறனுள் ஒன்று. அதனைச் செவிக்கேற்றிக் கூறியது உபசாரம். கைப்புடையன நாவிற் கின்னாவாயினும் உடலுக்கு நலம் பயக்குமாறு இடித்துரைக்கும் வெவ்வுரை, செவிக்கின்னா வாயினும் உயிர்க்கு நலம் பயக்குமென்பது கருதி அவ் வுரையைப் பொறுமையுடன் கேட்டல் நன்றென்பார், 'செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்பு' என்றார். இவ்விடித்துரை வாயுறை வாழ்த்தோ டொப்பது. இதனை, 'வாயுறை வாழ்த்தே வயங்க நாடின் - வேம்புங் கடுவும்போல வெஞ்சொற்றாங்குதலின்றி வழிநனி பயக்குமென் - றோம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே' (தொல்காப்பியம்-செய்யுளியல் - ககஉ) என் புழிக் காண்க. தாங்குதலின்றி - தடையின்றி. இங்ஙனம் செவி கைப்ப இடித்துரைத்தல் துணையாயினார் செயலாதலை 'நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண் - மேற்சென் றிடித்தற் பொருட்டு' (குறள் - எ அச) என ஆசிரியர் மேற் கூறுமாற்றானறிக.

இறை - தங்குதல். 'மேலா றிறை யமருள்' என வரும் புறப்பொருள் வெண்பாவினும் (பாடாண் - அ) இச் சொல் இப் பொருட்டாதல் காண்க. உலகமெல்லாம் தங்குதற் கிடமாதல் பற்றிக் கடவுளை இறை யென்ப. மேற் குறளில் அரசனை இறை யென்றார். அவன்பால் தங்குதல் யாது அஃது யாண்டுத் தங்குமென்றார்க்குத் தங்குவதுலகம், அஃதவன் குடைநிழற் கண்ணே தங்கு மென்றார். இவ்வாற்றான் மேலைக் குறளோ டிக் குறள் இடைப்பட்ட இயைபு விளங்குமாறு காண்க.

கவிகைக் கீழ்த் தங்கு முலகு என்றதால், முறை தவறாமையின் உலக முழுவது மவன் ஆட்சிக்குட்படு மென்பது பெறப்படும்.

மாட்சியுடைய மன்னன் குடை நிழலில் மக்கள் தங்குவர் என்றபடி. (௯)

அவன் ஒளியில் ஏனை மன்னர் தங்குவர் என்பது வருங் குறள் :

௩௯0. கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கு
முடையானாம் வேந்தர்க் கொளி.

(இ - ள்.) கொடை - (வகையறிந்து) வகுத்தலும், அளி - (யாவர் மாட்டும்) முகமலர்ந்து இனிய கூறலும், செங்கோல் -

(அறங் கோணுது) முறை செய்தலும், குடியோம்பல் - குடிகளைக் காத்தலும், நான்கும் உடையான் - இந்த நான்கு செயலையும் உடைய மன்னவன், வேந்தர்க்கு - ஏனை மன்னர்க்கெல்லாம், ஒளி ஆம் - விளக்குப்போல்வான். (எ - று.)

(இ - ள்.) கொடை, இன்சொல், செங்கோல், குடிகளைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய மன்னன் ஏனை மன்னர்க்கு விளக்குப்போல் விளங்குவான். (எ - ம்.)

செங்கோல் - செவ்வியகோல். அரசர் கையிற் பற்றும் கோல், நிறை கோலைச் சுட்டி முறை கோடாமையினை அறிவுறுத்தற் கமைந்ததொரு குறி. எனவே செங்கோலரசனெனப் படுவான், முறை வேண்டினர்க்கு நடுவுநின்று முறைசெய்வானுயிற்று. 'சமஞ்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற் - கோடாமை சான்றோர்க் கணி' (குறள் - ககஅ) என்றதும் ஈண்டு நோக்கற் பாலது. ஏனை வேந்தர்க்கு அவன் விளக்காதலாவது, அவர் அவன் காட்டும் வழியொழுகி அவன் கேடு கருதாது அவனுக்கு ஆக்கமாவதே தமக்கும் ஆக்கம் என்று கருதி அமைந் தொழுகல். (க0)

இவ் வதிகாரத்தில் முதற் குறளால் அரசற்கு அங்கமாவன இவை யென்பதும், அடுத்த நான்கு குறள்களால் அரசனது மாட்சியும், இறுதி ஐந்து குறள்களால் மாட்சியும் மாட்சியின் பயனும் கூறப்பட்டன.

அதிகாரம் ௪0.

கல்வி

அஃதாவது, கற்றற்குரிய நூல்களைக் கற்றல். கல்லுதலாவது தோண்டுதல். உயிர்கட்கு அமைந்த அறிவு, இறைவனறிவு போன்று வாலிதாகாது, ஆணவ இருளிற் புதைந்து கிடப்பது. அவ்விருட்படலத்தைச் சிறிது சிறிதாகக் கல்லியெடுத் தகற்றுவது கல்வி யாயிற்று. அவ் விருள் அகற்றப்பட்ட அளவாக உள்ளே மறைந்து கிடந்த அறிவு வெளிப்பட்டுத் தோன்றும். 'தொட்டனைத் தூறும்' (குறள்-நூகூரு) என்பதும் இதுபற்றி. மேல் அரசனைக் கடவுளோ டொப்பித்தார். சிலவாற்றால் அவ் வொப்புமை செல்லினும், வாலறிவனுகிய இறைவனும் வேறு, சிற்றறிவுடைய உயிர்களில் ஒருவனுகிய அரசனும் வேறு என்பது அறிவுறுத்தற்கு. அரசனுக்கு அறிவுடைமை, இறைவனுக்கு இயற்கையி னிறைந்தது போலாது, செயற்கையின் மிகுவதென்பது தோன்றவும், அரசனுக்குரிய

ஏனை மாட்சிகளெல்லாம் இக் கல்வியில்லையேற் சிறவா வென்பது தோன்றவும் இதனை இறைமாட்சியினையடுத்து முன் வைத்தார். மற்றிக் கல்வி அரசனுக்கே அரசமாட்சி தருவதோ டமையாது அரசரல்லார்க்கும் அரசமாட்சி தருவதொன்றுதலாலும் இறைமாட்சியின்பின் பொதுப்படக் கூறப்படுவதாயிற்று. இஃது அரசரல்லார்க்கும் அரசமாட்சி தருவதெற்றாற் பெறுதுமெனின், 'யாதானு நாடாமா லூராமால்' (கூ௯எ) 'கேடில் விழுச் செல்வங்கல்வி' (௪00) என ஆசிரியரும் 'அறிவுடையோனு றரசுஞ் செல்லும்' (புறம்-க௮௩) எனச் சங்கத்துச் சான்றோரும், 'மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின் - மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்' எனப் பிற்காலத்துச் சான்றோருங் கூறுமாற்றாற் பெறுது மென்பது. அரசர்க்குக் கல்வி மாட்சி தருதல், "தூங்காமை கல்வி துணிவுடைமை' (௩௮௩) என மேலதிகாரத்துக் கூறினமையிற் பெற்றாம்.

இம்மையும் மறுமையும் வீடும்பயக்கவல்ல கல்வியை ஈண்டுப் பொருட்பாலில் அரசியலிற் கூறிய தென்னையோ எனின், கல்வியானுய ஒழுக்கமும் மெய்யுணர்வுமே மறுமையும் வீடும் பயக்க வல்லனவேயன்றி, அவற்றிற்குக் கருவியாய கல்விதானே நேரில் மறுமையும் வீடும் பயப்பதன்று. ஆகலான், கல்வியின் காரியமான ஒழுக்கமுடைமையினையும் மெய்யுணர்தலையும் அறப்பாலிற் கூறி, ஈண்டு அவற்றிற்கேயன்றி பொருள்செயற்கும் கருவியான கல்வியைக் கூறினார். 'இருவே றுலகத் தியற்கை திருவேறு - தெள்ளிய ராதலும் வேறு' (குறள்-௩எ௪) என்பவாதலான், ஊழான் நெறிவேறுபட்டுக் கல்வியுந் திருவும் ஓரிடத் தொருங்கு நிற்றல் அரிதாமேனும், அவை யிரண்டும் ஒன்றற்கொன்று கருவியாய் ஒன்றனையொன்றுக்குமாற்றான் இயைபுடையனவாதலின், திருவுடை மன்னர்க்கு இன்றியமையாச் சிறப்பிற்றென அவரியல் கூறும் அரசியலிற் கூறப்பட்ட திஃதென்க. அல்லதூஉம் தானே யன்றித் தன் குடைக்கீழ் வாழும் மக்களும் கல்வியுடையராதற்கு வேண்டுவன செய்தல் அரசன் கடமை யென்பது கருதி இஃது அரசியலிற் கூறப்பட்டதெனலுமாம்.

கல்வி, அறிவுநூற் கல்வி யென்றும் உலகநூற் கல்வி யென்றும் இருவகைப்படும். அவற்றுள் அறிவுநூற் கல்வி மெய்யுணர்தற்குக் கருவியாய் வீடு பயப்பது. உலகநூற் கல்வி, அவ்வவர் தொழிலுக் கேற்பப் பலதிறப்படும். இவ் விருவகை நூலுள் ஒன்றை யிகழ்ந்து மற்றதைப் புகழ்வார் பலர்.

'அலகுசால் கற்பி னறிவுநூல் கல்லா
துலகநூ லோதுவ தெல்லாங்—கலகல

கூடற் றுணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவா ரில்'

(நாலடி - கசO)

என்றதுங் காண்க. ஆசிரியர் அறம் பொருளின்பங்களின்றி வீடில்லை என்பதே பற்றி அவற்றுள் எதையும் இகழாது கொள்வராதலின், உலகநூற் கல்வி அறிவுநூற் கல்வி இரண்டையும் உடன்பட்டு அவற்றிற்குப் பொதுப்பட நின்ற கல்வியினையே ஈண்டுக் கூறுகின்றார். அதிகார இயைபு முன்னே பெறப்பட்டது.

இவ் வதிகாரத்தில், கற்கப்படுவன கற்குமாறுங் கற்றற் பயனும், கற்கப்படுவனவற்றுள் இன்றியமையாதனவும், கற்றார் சிறப்பும் கல்லார் இழிவும், கல்வியிற் சிறந்தார் தன்மையும், அவர் உயர்வும் ஏனையார் தாழ்வும், கல்வியின் சிறப்பும் முறையே கூறுவான் வைத்த ஆசிரியர் முதற்கண் கற்கப்படுவன கற்குமாறுங் கற்றற் பயனுங் கூறுகின்றார்.

௩௯௧. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக.

(இ - ள்.) கற்பவை - (ஒருவன்) கற்கத்தக்க நூல்களை, கசடறக் கற்க - பழுதறக் கற்கக் கடவன்; கற்றபின் - (அவ்வாறு) கற்றால், அதற்குத் தக - அக்கல்விக்குத் தக்கவாறு, நிற்க - (நன்னெறிக்கண்ணே) நிற்கக் கடவன்; (எ - று.)

இ - து.) தக்க நூல்களைக் கற்கவேண்டும்; கற்றால் அக் கல்விக்குத் தக்கவாறு நன்னெறியில் நிற்க வேண்டும். (எ - ம்.)

தக்க நூல்களாவன, அறம் பொருள் இன்பங்களைக் குறித்து வினையினீங்கி விளங்கிய அறிவின் மிக்காரும் அவரோ டொருபுடை ஒப்பாருமாகிய தக்கார் எழுதிய நூல்கள். ஏனையார் எழுதிய நூலாயின் குற்றமிருந்து பயன் குன்றிக் கற்பார் வாணாளை வீணாக்கும் பெற்றியவா மாதலின் அவை கற்கத் தக்கன வல்ல என்பதாயிற்று.

(தொடரும்)

மேலைநாட்டு மெய்விளக்கம்

[திரு. சு. அன்புமலர், பி. ஏ. ஆனர்ஸ்]

(சிலம்பு: உக, பரல்: ரு, கருரு-ஆம் பக்கத் தொடர்ச்சி)

[மேலை நாட்டு மெய்விளக்க ஆராய்ச்சியைக் குறித்துத் தொடர்ச்சியாக திருவளார் எஸ். சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் செந்தமிழ்ச் செல்வியின் துவக்க இதழ்களில் மேல் நாட்டுத்தத்துவ விளக்கம் என்னும் தலைப்பில் எழுதி வந்தார்கள். சாக்ரடீஸ் காலத்திற்கு முந்திய கிரேக்க நாட்டு மெய் விளக்க வரலாற்றைச் செம்மையாக எளிய தமிழில் எழுதி வந்தார்கள். பின்னர் ஏதோ காரணமாக அக்கட்டுரைத் தொடர்ச்சி நின்று விட்டது. நான் அவர்கள் விட்ட இடத்தி னின்றும், அஃதாவது சாக்ரடீஸ் காலந்தொட்டுள்ள ஆராய்ச்சி வரலாற்றை எழுத முயன்றுள்ளேன்.]

கிரேக்க நாட்டு மெய்விளக்க ஆராய்ச்சி

சாக்ரடீஸ் (Socrates):

தொகுப்பு வழி அளவை (Process of Induction) முறை யால் அனைவரையும் உட்படுத்துகிற உண்மையான விளக்க வரையறைகளைக் (Definitions) கற்பித்தல் இயலுவதே எனச் சாக்ரடீஸ் சாதித்தார் என்பதைக் கழிந்த இதழில் கண்டோம்.

உரையாடல் முறையிலுள்ள அவர் ஆராய்ச்சியின் பெரும் பகுதியும் ஒழுக்க நூல் (Ethics) துறையின் பால்படுகிற சொற் களுக்கு விளக்க வரையறைகளைக் கற்பிக்கும் முயற்சியாக இருப் பதைக் காணலாம். நீதி (Justice), நேர்மை (Right), நேர்மை யின்மை (Wrong), நன்மை (Good), தீமை (Bad) என்பன போன்ற ஒழுக்கத்துறைச் சொற்களின் துல்லிய பொருள் களைக் கற்றுணரவேண்டும் என்பதே அவருடைய முழு நோக்கமுமாகும. உதாரணமாக, கொடுமை செய்பவன் தண் டனைக்குரியவன் என்பதை அனைவரும் ஒத்துக்கொள்ளுவர். ஆனால், 'கொடியவன் யாவன்? கொடுமை எது?' என்பவற்றைத் திட்டவட்டமாக எவரும் விளக்கமுடிவதில்லை. எனவே, மிகச் சாதாரணமாக அன்றாட வாழ்க்கையில் நாம் கையாளுகிற சொற்களின் உண்மைப் பொருள்களைச் சரிவர உணர்ந்து, வரையறை புரிந்துகொள்ளவேண்டும் என்பதே அவர் போதனை யின் முக்கியமான பகுதி.

இதைக் காரணமாகக் காட்டி கருத்துரைஞர் சிலர் சாக்ரடீ ஸிடம் குறைபாடு கண்டனர். அவர் நல்லொழுக்கக் கொள்கை

யாளரே (Moralist) தவிர மெய்விளக்க அறிஞரல்ல (Philosopher) என்று துணிந்து கூறினர். ஏனெனின், அவர் வகுத்தது என்று கொள்ளத்தகுந்த வகையில் எவ்வித மெய்விளக்க முறைமையும் (Philosophical system) அவர் உருவாக்கவில்லை. அவருடைய ஆராய்ச்சி மனிதன், சமூகம் என்பன போன்ற பொருள்களைச் சார்ந்ததாக இருந்தது. ஆனால், இன்னும் சிறிது ஊன்றிப்பார்க்குங்கால் கூறிய குறைபாடு தவறு என்பது நன்கு விளங்கும்.

பருப்பொருள்உலகின் படைப்பைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனைகள் அவர் கொண்டிருக்கவில்லை என்பது உண்மையே. சாக்ரடீஸ் காலத்திற்கு முற்பட்ட மெய்விளக்க அறிஞர்கள் வெளியுலகான மண்ணுலகின் ஆரம்பம், ஆக்கம், அவற்றின் நிகழ்ச்சித் தன்மைகள் ஆகியவற்றை ஆராய்ந்தனர். ஆனால் சாக்ரடீஸ், புறஉலகப் படைப்பைச் சார்ந்த சிந்தனைகளை ஒரு புறம் ஒதுக்கிவிட்டு, மனிதனின் அகவுலக அதாவது மனஉலகைச் சார்ந்ததாகத் தன் ஆராய்ச்சியின் போக்கைத் திருப்பினர். ஏனெனின், குளறுபாடுகள் நிறைந்த இயற்கையமைப்பினின்றும் நாம் கற்றுணரத் தக்கவை சிறு அளவே என்பது அவர் கருத்து. அதோடு பருப்பொருளியலான கோட்பாட்டாராய்ச்சிகளால் (Physical speculations) ஈடுபட்ட பண்டைய அறிஞர்கள் பலவாறன அறிவிற்கொவ்வாத பொருந்தாக் கொள்கைகளையே தந்தனர். ஆகவே, புறஉலகப் பொருள்களைப் பற்றிய உறுதியான கருத்துக்களை மனிதன் பெறமுடியாது, அவை மனித அறிவிற்கு அப்பாற்பட்டது என்பது அவர் கொண்ட முடிபு.

மேலும், நடைமுறையில் பயன் தருபவைகளிலேயே அவர் அதிகமான அக்கரை கொண்டிருந்தார். கல்வியின் பயன், கற்றவன் தனக்கும் பிறர்க்கும் தான் விரும்புகிற நலன்களைச் செய்வதாகும். ஆனால், அண்டம் (Cosmos), அதன் இயக்க நிலைகள் ஆகியவற்றை ஆராய்வதால் செயல் வகைப்பெரு நலன்கள் எதுவுமே விளையாது என்று அவர் கருதினர்.

எனவே, அறிவின் தன்மையை ஆராய்வதில் தன் கருத்தைச் செலுத்தினர். 'மனம், எண்ணம், மனச்சான்று ஆகிய தன்னைச் சார்ந்த காரியங்களை அறிந்துகொள்வதிலேயே மனிதன் திட்டவட்டமான கருத்துக்களைப் பெறமுடியும்; உள்ளுலகைத் தெள்ளத் தெரிந்து தேர்ந்த பின்னரே வெளியுலக அறிவைப்பெற முயலவேனும் முடியும்' என்பது அவரின் திடமான கொள்கை. மண்ணுலக ஆராய்ச்சியில், தாம் ஈடுபடாததின் காரணத்தைச் சாக்ரடீஸ் ஓரிடத்துக் கீழ்க்கண்டவாறு கூறுவதாகப் பிளேட்

டோவால் (Plato) சித்தரிக்கப்பட்டிருக்கிறது. "I have not leisure for such things and I will tell you the reason. I am not yet able, according to the Delphic Inscription, to know myself; and it appears to me ridiculous, while ignorant of myself to inquire into what I am not concerned in."

ஆகவே 'உன்னை அறிந்துகொள்' (Know thyself) என்ற பொருளார்ந்த கொள்கையே சாக்ரடீசின் கோட்பாடு. 'தன்னை அறிவதே' மனிதனின் ஒரே பிரச்சனை. ஏனைய பிற அறிவுகள் அனைத்தும் பெறுமதியற்றவையும், சிறப்பிற்குரியதாகாத சிற்றறிவுமேயாகும். சாக்ரடீஸ் தம்முடைய அறியாமையைப் பற்றித்தற்புகழ்ச்சி செய்துகொள்வார். மற்றவர்களைவிட அறிவிற்சிறந்தவராக அவர் கருதப்பட்டதின் காரணம், 'பிறர் தங்களுடைய அறியாமையை உணர்ந்துகொள்ளாது தங்களைத் தாங்கள் நிறைந்த அறிவுடையவராகக் கருதிக்கொள்ளும்போது, அவர் தம்முடைய அறியாமையை நன்கு உணர்ந்துகொண்டுள்ளார் என்பதே' என அவர் அடிக்கடி கூறுவதுண்டு. எனவே, இவ்வாறு, மெய்விளக்க ஆராய்ச்சி அகவுலக அறிவைப் பற்றுக்கோடாகக் கொண்டே ஆரம்பிக்கப்படவேண்டும் என்று அவர் கருதியதால், அவருடைய ஆராய்ச்சி முறைகள் மனிதன், ஒழுக்கம், அறம், நேர்மை, வாழ்வு என்ற ஒழுக்கநூல் பால்படுகின்ற பொருள்களைச் சார்ந்ததாக இருந்தது.

"ஒழுக்கம் என்றால் என்ன? நான் என்னுடைய வாழ்க்கையை எவ்வாறு ஒழுங்கு படுத்துவது? வாழ்வின் அறிவுப் பாதை எது? பகுத்தறிவு பெற்ற மனிதன் செயல்கள் எவ்வகை இருத்தல் வேண்டும்." என்பன போன்ற வினாக்களுக்கு விடைகாணுவதே அவரின் சீரிய பணியாகும். உலகில் யாவரையும் கட்டுப்படுத்துகிற பொது விதி (Principle), அல்லது பொது அளவு (Standard) அல்லது பொது நன்மை (Good) இருக்கிறது அப் பொதுநன்மையாய விதியை ஆதாரமாகக் கொண்டே நேர்மை நேர்மையின்மை, தெய்வப்பற்று - தெய்வநிந்தனை, அழகு - அழகின்மை, மேம்பாடு - சிறுமை, நீதி - நீதியின்மை, அடக்கம் அடங்காமை, வீரம் - கோழைத்தனம் என்ற எதிர் மறைகள் அளவிடப்படுகின்றன. அப்பொது நன்மையே மீ உயர்ந்த நன்மை (Highest good) என்று அவர் அறுதியிட்டுரைத்தனர். இவ்விடத்து, அம் மீ உயர்ந்த நன்மை எது என்ற கேள்வி எழுதல் இயல்பு. 'அறிவே மீ உயர்ந்த நன்மை' (Knowledge is the highest good) என்பதே அதற்கு அவர் தரும் வணக்கமாகும். நன்மை என்பது அறமே.

சாக்ரடீஸிடமிருந்து பிறந்த தெளிந்த கொள்கைகளில் ஒன்று 'அறிவே அறம்' (Virtue is wisdom) என்பதாகும். ஒரு செயலின் முடிவுகள் (Ends), வகைதுறைகள் (Means), சூழ்நிலைகள் (Conditions) ஆகியவை இன்னின்ன வகையில் இருத்தல்வேண்டும் என்ற பொது நோக்கத்தை மனத்தில் வைத்துக்கொண்டு செய்யப்படும் செயலே அறமென்பது. 'செயல்' அல்லது 'செய்கை' மனிதனின் உணர்வறிவில்லாமல் நிகழ முடியாது. தீயசெயலோ அன்றி நற்செயலோ செய்ப வனின் உணர்வறிவில்லாமல் நிகழ்ந்தது என்பது பொருந்தாக் கூற்றாகும். உணர்ந்தறிவதில் ஏற்படுகிற தவறுதலால் தீவினை கள் நிகழ்கின்றன. ஒரு செயலைத் தவறு என நன்கு தெரிந்த பின்பும் அதைச் செய்பவன் தவறு எனத் தெரிந்துகொள்ளாமல் அதைச் செய்பவனைவிடப் பன்மடங்கு சிறந்தவன் எனக் கொள்ளவேண்டும். தவறு எனத் தெரிந்தும் அதைச் செய்பவ னிடத்தில் அறிவிருக்கிறது; ஆனால், அறம் ஒருசிறிது கெட்டு விட்டது என்ற பழியே சாரும். ஆனால் தவறெனத் தெரியாமல் அதைச் செய்பவனிடத்து அறிவுமில்லை, அறமுமில்லை என்ற இரு பழிகளும் சாருகின்றன. எனவே அனைவரையும் கட்டுப்படுத்தும் உண்மையான பொது அறிவைப்பெற்று அதன் வழி ஒழுகுதலே 'அறிவே அறம்' என்பதன் விளக்கமாகச் சாக்ரடீஸ் கொண்டிருந்தார்.

தனிப்பட்டவர்களிடத்தில் அமைந்துகிடந்தும் எல்லோ ரையும் கட்டுப்படுத்துகிறதுமான பொதுமுடிவின் அல்லது பொதுவிதியின் அடிப்படையிலேயே அறச்செயல்கள் அளவிடப் படுகின்றன; அப் பொதுமுடிவை அறிந்து கொள்ளுதல் அறிவுடைமை; அதன்வழி யொழுகுதல் அறம்வழி நிற்றல் என்ற மூன்று கருத்துக்களையும் கொண்டு, சாக்ரடீஸ் ஒழுக்க நூலிற்கு விதையூன்றினார். சாக்ரடீஸ் காலத்திற்குப்பின்பு, அப் பொதுமுடிவு யாதென அறியும் முயற்சியில் பலவித மாறுபட்ட கருத்துக்கள் எழுந்தன. ஆன்றிஸ்தெனஸ் (Antisthenes), அரிஸ்ற்றிப்பஸ் (Aristippus), இயூக்லிட் (Euclid) என்பவர்கள் முறையே சினிக் (Cynic), சிரனியாக் (Cyraniac), மாகரிக் (Magaric) என்ற வகைமுறைகளைத் துவங்கினர் இவற்றைப் பின்னர் வேண்டியவிடத்து விரிவாகக் காண்பாம். ஒழுக்க நூலை ஓர் இயல் நூலாக (Science) ஆக்கியது சாக்ரடீஸே ஆகும்.

(தொடரும்)

எலியும் புலியும்

[குடந்தை, திரு. சு. கண்ணன். பி. ஏ.]

காவிரிப் புதுப்புனல் கரைபுரண்டு வந்தது. உழவன் உள்ளத்தில் உவகை பூத்தது. மனமும் முகமும் ஒருங்கே மலர்ந்தன. வயலில் நீர் பாய்ச்சினான்; எரு இட்டான். காலையில் கழனிக்குச் சென்று, கடும்பகல் முழுதும் மாலைவரையும் உழுதான். காலையில் கஞ்சி குடித்தவன் மாலையில் வந்துதான் உணவருந்தினான். தான் இதுவரை காத்து வந்த விதைகளைக் கொண்டு விதைத்தான். எப்படிக் காப்பாற்றியது? இல்லாளும், இன்மக்களும் பசியால் வருந்தும் சோகக்காட்சியைக் கண்ணால் கண்டும், விதை நெல்லை எடுத்து உண்ணாது காப்பாற்றியது ஏன்? விதை நெல் உண்டு உயிர் வாழ்ந்தான் என்ற பழிச்சொல் வரும் என்று அஞ்சி.

ஈராண்டு தவறிய வான்மழையும் துணை புரிந்தது. அளவிலா மகிழ்ச்சி. களை எடுத்தான். அல்லும் பகலும், விலங்கினமும் வேண்டாதோரும் தீண்டாதவாறு வயலைக் காத்தான். இது போன்று எத்துணையோ அல்லற் பட்டான் ஆறேழு மாதங்கள்.

அந்தச் சிறிய பழனத்தில் பச்சைப் பசேல் எனத் தழைத்துச் செழித்து வளர்ந்தது நெற்பயிர். கதிர் முதிர்ந்து பழுத்துத் தலை சாய்த்தது; செவ்விதாக வளர்ந்து முற்றி அறுப்பதற்குத் தயாராக இருந்தது.

இதை நோக்கிற்று ஓர் எலி. தக்க உணவு கிடைத்தது என்று கழி மகிழ்வு கொண்டது. கொண்டு, அன்று மட்டும் வேண்டிய அளவு வயிறு நிரம்ப உண்டு விட்டுவிடவில்லை. நாளை மழை வந்தாலோ அன்றி, விளை நெல் உழவன் வீட்டுக்குப் போய் விட்டாலோ தனக்குக் கிடைப்பது அரிது என்று சிந்தித்தது. ஆதலால் விளைந்த கதிராகிய உணவைச் சிறிது சிறிதாகத் தன் சிற்றளைக்கு இன்றைக்கும், இன்னும் பல நாட்கட்கும் பயன்படுமளவுக்கு நிறையச் சேர்த்து வைத்தது.

ஆம், எலியின் நோக்கு அதன் அளவில் நன்னோக்குத்தான். பிற்காலத்திற்காக இன்றே முயன்று சேர்த்தது. ஆனால்........?

உழவன் காலை வந்து பார்த்தான். ஒரு பக்கம் முழுதும் கதிர்கள் களவாடப்பட்டிருந்தன. தான் கூட உண்ணாது காத்து, விதைத்து, உடலால் நாள்முழுதும் உழைத்து அல்லற்

பட்ட அவன் மனம் என்ன பாடுபடும்? சொல்லி முடியாது. எலியின் முயற்சி சிறிய முயற்சி; இழிந்த முயற்சி. தன் அளை நிறைய வைத்துக்கொண்டதாயினும், அதற்கென உழைத்தவர் வேறொருவர் ஆக, அவர் உழைப்பின் பயனாக வந்த விளைவைத் தான் கவர்ந்து கொண்டதால் அது இழிந்த முயற்சி; பிறர்க்குத் துன்பம் தரவல்லது, எலியின் தன்மை இது.

ஆனால், விலங்கினத்தில் மற்றொரு வகை உயிரினமும் உண்டு. ஒரு புலி காலைமுதல் உணவுகிடைக்காமல் வருந்தியது. நடுப்பகல் எல்லாம் காடுமுழுதும் சுற்றியது; பயனில்லை. பசியின் கொடுமையால் கண் இருண்டது. இறுதியில் இருட்டும் நேரத்தில் வெகு தொலைவில் ஒரு சிறு பன்றி தென்பட்டது. உணவு கிடைத்தது. உண்ணலாம் என்று எண்ணி மகிழ்ந்து, வெகு வேகமாகத் தாவி அதன் மேற் பாய்ந்து கொன்றது. உயிர் இழந்த பன்றி புலியின் இடப்பக்கத்தே வீழ்ந்தது. இதைக் கண்ட புலி அதைத்தின்னாது அவ்விடமே விட்டுச்சென்று, இரவுமுழுதும், தன் பெரும் முழையின்கண் பசியுடன் உறங்கியது.

மறுநாட்காலை எழுந்து பெரியதொரு களிறைத் தன் வலப்பக்கம் வீழுமாறு கொன்று அதைத் தின்றது. இது எதைக் காட்டுகிறது? தன் இடப்பக்கம் வீழாது, வலப்பக்கம் வீழ்ந்த இரை ஒன்றையே தின்ன வேண்டும் என்ற தன் கொள்கையை, தான் இறக்கும் தறுவாயில் கூட விடாதிருக்கும் ஒரு பெருங் குணத்தைத்தான், அதன் மன உரத்தைத்தான் காட்டுகிறது. இது புலியின் பெருந்தன்மை.

முன்னைய எலியின் உள்ளத்தின் மெலிவிற்கும், புலியின் உள்ளத்தின் உயர்வுக்கும் தான் எட்டுணை வேற்றுமை?

இவ்வேற்றுமை விலங்கினத்தின் உலகிலேதான் நிலவியுள்ளது என்று எண்ணவேண்டா. ஐந்தறிவேயுடைய அவ்விழிந்த உயிரிடந்தான் உளது என்று இகழவேண்டாம். பல துறையிலும் முன்னேறிய பகுத்தறிவாளராகிய மனிதர்களிடமும் இருக்கிறது. பண்பற்றோரும், பண்புடையோரும் கலந்து வாழ்கின்றனர் மக்கட் கூட்டத்திலும்.

மக்களிற் சிலர் தந்நலம் கருதாது பிறர்க்கே உரியராய், மற்றோரது ஆக்கத்திற்கும் நன்மைக்கும் உழைக்கும் உயர்ந்த உள்ளம் படைத்தவராய், மறவழி மன்னுபுகழ் தராது, "அறமொன்றேதரும் மெய்யின்பம்" என்பதை ஓர்ந்து அறக்கொள்கையை, வழுவாது கடைப்பிடிக்கும் மனத்திட்பம் உடையவராய்

அறத்திற்கு மாறுபட்ட வழியில் எனின், 'உலகுடன் பெறினும் கொள்ளலாகாது' என்று எண்ணும் பண்புள்ளம் படைத்தவராய் வாழுகின்றனர்.

சிலர் மேற்கூறிய உள்ளத்துயர்வும் மனத்திட்பமும் படைத்திலர்; குறுகிய உள்ளம், பிறர் உழைக்கத் தாம் அதன் பயனை பருகும் பண்பு, எந்நலத்துள்ளும் தந்நலமே சிறந்தது என்ற கொள்கை, ஒன்று உற்றக்கால், தம்மை விரைந்து விற்றற்குரிய கீழ்மை—இவைகளையே தம் முத்திரைச் சின்னங்களாகக் கொண்டு வாழும் நடைப்பிணங்கள்.

முன்னவர் புலிபோன்றவர்; பின்னவர் எலி அனையர். பின் கூறிய கீழோரது நட்பை விலக்கி ஏனைய மேலோரைத் தழுவிக் கொள்ளல் வேண்டும். அதுவே முன்னேற வழி.

இது பழம் புறப்பாட்டு ஒன்று கூறும் அறிவுரை.

சோழன் நல்லுருத்திரன் என்பான் சோழநாட்டை ஆண்ட சங்ககால மன்னருள் ஒருவன். காலத்தாற் சற்றுப் பிற்பட்டவன். ஆயினும் ஆழ்ந்த கல்விச் செல்வமும், பரந்த கேள்வி அறிவும் நிரம்பப் பெற்றவன். பாப்புனையும் நாவன்மை படைத்தவன். எண்ணியதை எண்ணியாங்கு சீரிய முறையில் செய்யும் திண்ணிய மனம் உடையவன். இவன் முடியுடைவேந்தருள் ஒருவனாதலின், இவனைச் சூழ்ந்து ஒரு பெருங்கூட்டம் எப்போதும் இருக்கும். குறுநில மன்னர் இருப்பர்; செல்வ மக்கள் இருப்பர்; நல்லோரும் இருப்பர்; அல்லாரும் இருப்பர். சிலர் அவனுக்குக் கேடு சூழ்ந்தனர்; சிலர் கேடில் ஆக்கம் தேடித்தந்தனர்.

சூழ்ந்திருந்தோரின் குணங்களையும், குற்றங்களையும் பயின்று அறியும் அறிவும், அதற்கேற்ற வாய்ப்பும் ஒருங்கே அவனுக்குச் சிறப்புற அமைந்திருந்தன. அதனைப் பயன்படுத்த அவன் அவர்களை இரு பகுதியினராய்ப் பிரித்தான்.

ஒரு பிரிவினர் நெல் விளைந்த கழனிடம் நோக்கி, கதிரைத் தன் வளைக்குள் கொண்டு சேர்க்கும் எலியின் தன்மைபோலப் பிறர் நலம் பேணாது, தந்நலத்தால் பிறர்க்குக் கேடு விளைவிக்கும் கீழ்மையராய் இருக்கக்கண்டான். அவர்கள் தம் செல்வத்தை நுகராது, மன்னன் செல்வத்திற்காக அவனுக்குக் கேடுசூழும் பொருத்தமில்லா நட்பினராய் இருத்தலை அறிந்தான்.

மற்றொரு பிரிவினர் இடம்வீழ்ந்த பன்றியைத் தின்னாது, மறுநாள் வலம்வீழ்ந்த களிறையே தின்னும் புலியின் இயல்பு போன்று குறைவற்ற உள்ளத்து உரனோடு, நல்லனவே செய்யும் நட்பினராய் இருந்தனர்.

ஆதலால் அவன் முன்னவரை நீக்கி, பின்னவரது நட்புக் கொண்டான். கொண்டு, அரிய செயல்கள் பல செய்து, மிக்க பொருளும், நல்ல புகழும் அடைந்தான்.

இந்த உண்மையை உலகோர் அறியவேண்டும் என்று அவாக் கொண்டான். அந்த ஆசையின் முதிர்ச்சி, ஒரு பாடலாக அவனிடமிருந்து வெளிவந்தது. இத்தனை கருத்துக்களையும் கொண்டு அவன் அன்று பாடிய பாட்டே இன்று அழியாத இலக்கியமாக நின்று நமக்கு அவன் அறிந்த சிறந்த உண்மையைச் செவியறிவுறுத்துகிறது. இதுதான் அவன் பாட்டு:

விளைபதச் சீறிட நோக்கி வளைகதிர்
வல்சி கொண்டளை மல்க வைக்கும்
எலிமுயன் றனைய ராகி யுள்ளதம்
வளன்வலி யுறுக்கு முளமி லாளரொ
டியைந்த கேண்மை யில்லா கியரோ
கடுங்கட் கேழ லிடம்பட வீழ்ந்தென
அன்றவ ணுண்ணா தாகி வழிநாட்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்
திருங்களிற் றொருத்த னல்வலம் படுக்கும்
புலிபசித் தன்ன மெலிவி லுள்ளத்
துரனுடை யாளர் கேண்மையொ
டியைந்த வைக லுளவா கியரோ. (புறநானூறு 190)

வல்சி — உணவு; மல்க — நிறைய; கேண்மை — நட்பு; கேழல்—பன்றி; விடர் அகம்—குகை.

படித்தார் நிலையும், படிப்பார் நிலையும்

[நெல்லை திரு. க. சுப்பிரமணியன்]

நாட்டினில் வதியும் மாந்தர் பலருளும் படித்தார் எல்லாம்
சீட்டுடன் புகையைக் கோடல்; சிறியபுன் மொழிகள் பேசல்;
நாட்டியம், செய்தித் தாள்கள், திரைப்பட நடிப்பும், இன்ன
காட்டிய நெறியிற் போகிப் பொழுதினைக் கழிக்கின் றாரே!

இன்றைநாள் மாணக் கர்கள் இலக்கியம் விரும்பார்; காம
இன்பமே பொதிந்த அட்டை எழிற்படம் கொண்ட நூலை
நன்றெனெ எண்ணிக் கற்கும் நிலையினை நண்ணி னார்கள்;
என்றுமே பயனும் இல்லை; இவர்நிலை என்னே! என்னே!

சேக்கிழார் திருமொழி உண்மை

(சிலம்பு-உக, பரல்-ரு, கருகூ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இங்ஙனம் நிற்க, மேல் எடுத்துக்கொண்ட பொருளை ஆராய்வோம். சேக்கிழார் அடிகள் அருளிச்செய்ததாகப் பெறப்படும் அத்திருமொழியின் ஒரு சிறு பகுதியே கூத்தப் பெருமான் முதல் எடுத்துக் கொடுத்ததேயன்றி வேறில்லை. ஏனைய எல்லாம் சேக்கிழார் அடிகள் பாடியருளியது. இங்ஙனமாக மிகுந்த பாகத்துக்கு ஆக்கியோராகிய சேக்கிழார் அடிகள் மொழியைக் குறைந்த பாகத்துக்கு ஆக்கியோராகிய கடவுள் மொழியில் அடங்கியிருப்பதெனக் கூறுவது பொருந்தாதெனின், மிகுந்த பாகத்தை அருளிச் செய்தவராகிய சேக்கிழார் அடிகள் என்னை அந்தக் குறைந்த பாகமும் சொல்லத் தெரியாதவரா? அவருக்கு ஏன் அந்தப் பாகத்தை முதலாகக் கடவுள் எடுத்துக் கொடுக்க வேண்டும்? சேக்கிழார் அடிகள் எந்தப் பாகமும் சொல்வார்? அதற்கு மேலும் சொல்வார். கடவுள் மொழியில் வேற்றுமையாகிறபடி அவர்தாம் என்னை, யாம் சொல்லமாட்டேமா? எம் அளவுக்கு இசைந்தபடி, எம் அளவின்படி யாம் சொல்வது போலவே சேக்கிழாரடிகள் தம் அளவின்படி தாமும் சொல்லுவரேயன்றிக் கடவுள் தம் அளவின்படி, கூறிய பாகத்தில் எப்படிக் கூடுதல் பெறும். கடவுள் சேக்கிழாராகாமையாலும், சேக்கிழார் கடவுள் ஆகாமையாலும் அவரவர் அளவின்படி மொழிகள் போந்திடுமாயின் அவை ஏற்றத் தாழ்வுடையனவாயே இருக்கும் என்பது பெற்றும். இதனால் சேக்கிழார் அடிகள் தம் அளவின்படி தாமே மிகுந்த பாகங்களை அருளினார் என்பதும் சேரா தொழியும்.

பெரிய புராணத்தில் (உலகெலாம்) என்று கூத்தப் பெருமானால் முதல் எடுத்துக் கொடுக்கப் பெற்ற குறைந்த பாகம் எந்த அளவுடைத்தோ? அந்த அளவே மற்றை மிகுந்த பாகங்களும் ஒப்புமை பெற்று விளங்கி உண்மையால் அவை ஒரே தன்மையின என்றல் அமையும். இதனால் இரண்டு மொழியும் ஒரே மொழி என்பதும் பெறும். இப்படிக் கொள்ளுங்கால் சேக்கிழார் அடிகள் தமது அறிவாலன்றித் திருவருட் போதத்தால் அருளியபடியோ எனின் அவர் என்னைச் சிவனடியார் தம்மிற் பலர் திருவருள் ஞானமேலீட்டால் பாடினார்களின் அவர் மொழிகளெல்லாம் சிவமொழியாகுமோ! சிவனடியார் மொழிகள் என்பதே போதரும். இதுவும் சேக்கிழார் அடிகளின் மொழியெனலால் சிவனடியார் மொழி என்றுலே அமையும்

எனின், இதற்கே யன்றி ஏனைய மொழிகளுக்குக், கடவுள் மொழி எடுத்துக் கொடுத்தனரா? இப்போது ஆராய்ச்சி யெல்லாம் கடவுள் முதல் எடுத்துக் கொடுத்தருளிய சிறப்புப் பாராட்டியே. ஆகையால் ஏனைய சிவனடியார் மொழிகள் சேக்கிழார் அடிகளின் மொழியுடன் ஒப்புமை பெறா என்க. சுந்தரமூர்த்தி அடிகள் அருளிச்செய்த திருத்தொண்டத் தொகைக்குக் கடவுள் முதல் எடுத்துக் கொடுத்தமையால் அவர் திருமொழியும் சிவமொழியாகுமே யெனின் அவரே சிவமாகையால் ஆராய வேண்டுவதில்லை. கடவுள் முதல் எடுத்துக் கொடுத்தாலும் கொடாவிட்டாலும் அவை ஒரே தன்மை பெறுதலால் ஆலால சுந்தரரே சுந்தரமூர்த்திகளாகத் தோன்றியருளியபடியால் இப்படியே சிவப் (விபூதி) பொருளாகிய[1] குமாரக் கடவுள், திருஞானசம்பந்தராகவும் சிவகணத் தலைவர் திருநாவுக்கரசராகவும் தோன்றச் செய்தமையால், அவர் மொழிகளும் சிவ மொழியாம். நால்வர் ஆசாரியர் மொழிகளோடு சேக்கிழார் அடிகள் திருமொழியும் சேர்க்கப்பட்டுத் திருமுறைகளாக எண்ணப்பட்டதனால், மற்றைத் திருமுறைகளும் சிவ மொழியாகுமெனின் அவைகளையும் திருமுறைகளாக ஆன்றோர் தொடுத்த முறைமையானே அவற்றின் ஏற்றம் வெளிப்படலால் அவை சிவமொழியாதலின் இழுக்கா என்க. அம் மொழிகளின் ஏற்றங்களும் அவை சிவமொழியாதற்குப் போந்த நெறி முறைமைகளும் இடம் வந்துழிப் பின்னர் எழுதுவாம்.

இனி, சேக்கிழார் அடிகள் திருமொழி எப்படிச் சிவமொழியாகும் என்பதைச் சற்றே விளக்குவாம். கூத்தப் பெருமான் அவருக்கு (உலகெலாம்) என்று முதல் எடுத்துக் கொடுத்தருளினார் என்பது உண்மையன்றோ? அப்படி எடுத்துக் கொடுக்குங்கால் அவர் என்ன திருமேனி பூண்டு வெளிப்பட்டு நேரில் நின்று அருளிச் செய்தனரா? வானொலியாக நின்று அருளிச் செய்ததேயன்றி வேறில்லை. அப்படியே சேக்கிழார் அடிகளை இயைந்தியக்கி (அதிட்டித்து) ஏனைய பாகங்களையும் அவரே சொல்லியருளினார் என்பதே மேலோர் கருத்தாம். ஆகாயம் என்னும் ஒரு பூதத்தை இடமாகக் கொண்டு முதல் எடுத்துக் கொடுத்தபடியே சேக்கிழார் அடிகளை இடமாகக்கொண்டு ஏனைய பாகங்களை அருளிச்செய்தபடியாம். சிவக்கொழுந்து (இலிங்க) வடிவத்தை இயைந்தியக்கி "நில்லு கண்ணப்ப நில்லு கண்ணப்ப என் அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப" என்று கண்ணப்ப தேவர்க்கு அருளிச் செய்தபடியும் இதற்குப் போந்த சான்றாம். சிவபெருமான் திருமேனி பூண்டு வந்தருளிச்

1. 'பொருபல'

செய்தலும் வாளுெலியாக நின்று அருள் செய்தலும் சிவலிங்கப் பெருமானை இயைந்தியக்கி நின்று அருளிச் செய்தலும் சிவனடியார்களை இயைந்தியக்கி நின்றருளிச் செய்தலும் அருள் மரபாகையால் அவையே ஈண்டு முடிபாயிற்றென்க. இந்த உண்மையால் சேக்கிழார் அடிகள் ஒன்றும் சொல்லியது இல்லையெனவும் யாவும் கூத்தக் கடவுளே அருளிச் செய்தார் எனவும் வெளிப்பட்டது. இப்படிக்கன்றி வேறு வகையாற் கோடல் அமைதி பெறாது என்க.

சிவபெருமான் இயங்குதிணை நிலைத்திணைகள் தோறும் கலந்திருந்து அவ்வவற்று இயல்பு அறிந்து இயங்கச் செய்வது மறை உடன்பாடாதலின், யாவும் யாவரும் அச் சிவனையன்றி ஒன்றும் செய்யவும் சொல்லவும் கூடாதல்லவா? அப்போது யாவர் சொல்வதும் கடவுள் சொல்வதே. ஆகிறபடியால், சேக்கிழார் அடிகட்கு மாத்திரம் சிறப்பு என்னவெனின், யாவர் சொல்வதையும் சொல்லுவிக்கின்றவர் கடவுள் என்றபடியே அல்லது கடவுளே சொல்லுகின்றார், சொன்னார் என்பது பொருந்தாது என்க. கடவுள் சொல்லுவிக்கின்றார் சொல்லுவித்தார் என்பதே அமையும். சிவலிங்கப் பெருமானிடமிருந்து அவர் ஒன்றைச் சொல்லுகையில் சிவலிங்கம் சொல்லிற்று; அவர் சொல்லுவித்தார் என்றல் அமையாமைபோலவே சேக்கிழார் அடிகளிடத்தும் கொள்ளற்பாலது என்க. ஆயின், சேக்கிழார் அடிகளை அதிட்டித்துப் பின் பாகங்களை ஏராளமாய் அருளிச் செய்த கடவுள் முன்பாகத்தை ஒரு சிறிது அருவமாயிருந்து சொன்னதையே கடவுள்மொழி என்று கொண்டிருக்கின்றானறிச் சேக்கிழார் அடிகள் மொழியை இயைந்தியக்கி உரைத்தபடியை அறிந்தது இல்லையன்றோ? உலகத்தில் அதன் பெருமை தோன்ற உரைக்க வந்தவராகையால் அவ்வுலக அநுபவத்தின்படி சிறப்புப்பெற அருவமாக நின்று உரைத்தபடியாம். உண்மையை ஊகிக்கின் அருவமாய் உரைத்ததென்று நாம் கொண்டிருப்பதைக் காட்டிலும் சேக்கிழார் அடிகளை இயைந்தியக்கி மேற்கொண்டு உரைத்ததே சிறப்பாம். எங்ஙனம் எனின் அருவமாக நின்று உரைத்தார் என்கையில் அங்ஙனம் நின்றருளிய இடம் பூதாகாயமாகையால் அதுவே திருமேனியாகி அறிவின்மை பெறும். அப்படியே சேக்கிழார் அடிகளிடம் ஆராய்கையில் அவர் உள்ளமாகிய ஞானகாய இடமே திருமேனியாகிச் சிறந்ததாதல் நிலையுதல் பெறும். இரண்டிலும் சிறந்ததுக்கே சிறப்புக் கூறப்படுதலால் சேக்கிழார் அடிகளை இயைந்தியக்கி உரைத்தமையே சிவபெருமான் விழைவு இருந்தபடியாம். பூதாகாயத்தில் விரவியுரைத்தருளியது பின் உரைக்கப்போகும் அதன் பெரு

மையை விளக்க ஏதுவாக இருந்தமையான் அதுவும் (ஸாமஞ் சஸமே) பெறும். இரண்டும் தம்மில் வேற்றுமையுரினும், இயைந் தியக்கிய பரன்மொழி வேற்றுமையே பெற்றமையும் உடலாகா யம் மேலுண்டாகப் போகிற சிறப்புக்கு ஏதுமாத்திரத்தால் இயைந்தியக்கி அறிவாகாயத்தையே உரிமையாகக் கொண்டமை யால், நிறைவாக இயைந்தியக்கி முற்றும் மருவிச் செய்தபடி கண் டுணர்க. மேல் ஆராய்ச்சியால் பூத ஆகாயத்தை இடமாகக் கொண்டு பரன் சொன்னதும் பரும் பார்வையில் அருவமும் நுட் பமும் அப்பார்வையில் உருவமுமாக நின்று அருளிச் செய்தார் என்பதாகக் கொள்ளவரும். இன்ன சிறந்த வியப்புக்கள் போத ரக்காணும் சேக்கிழார் அடிகள் திருமொழியாகிய பெரிய புரா ணத்தின் ஏற்றத்தை யாவரே அறியவல்லார்? போதுமான புண் ணியம் இல்லாதபோது.

இந்த உண்மையால் பெரிய புராணம் அடங்கலும் சிவ மொழி என்பதே துணியப்பட்டது. சேக்கிழார் மொழி யெனி னும் சிவபெருமான் திருமொழி யெனினும் ஒக்குமேனும், சேக் கிழாரும் சிவபெருமானும் ஒரு பொருள் அல்ல என்பதும் தெளிந்திடுக. உலகம் மாயையில் தோன்றும் எனினும் பரம னில் தோன்றுமெனினும், ஒக்குமேனும் மாயையும் பரனும் ஒன்றாகாதபடியை ஆராய்ந்து தெளியுமாபோல இப்பொருளில் அளவற்ற ஒப்புரைகளை இதுகொண்டே பெரியார்கள் தெளிந் துரைக்கக்கூடுமாகையால் இதை இவ்வளவில் விடுத்தாம்.

இதற்குத் திருதொண்டர் புராணம் எனவும் பெரிய புராணம் எனவும் பெயர் வழங்கலால் இவை குணிகுணத் தொடர்பால் அமைவுபெறும் திருத்தொண்டர் குணியும் பெருந் தன்மை குணமும் ஆகும். இதனால் திருத்தொண்டரே பெரியவர் ஆவர் என்பது வெளிப்பட்டது.

"பெரிது பெரிது புராணம் பெரிது.........
தொண்டர் தம்பெருமையைச் சொல்லவும் பெரிதே"

என்ற ஔவை வாய்மொழியும் சான்றும், பதினெண் புராணங் களையும் வியாதரை இயைந்தியக்கிச் சிவபெருமான் உரைத் தருளியபடியே இப்பெரிய புராணத்தைச் சேக்கிழாரை இயைந் தியக்கி வெளிப்படுத்தினர் என்பது உண்மை, வியாதர் மொழி யே யன்றி ஏனைய நூல்கள் பிரமானமா என்று சிலர் கூறுவரே யெனின் வியாதருக் குண்டான சிறப்பெல்லாம் அவர் சிவனடி யாரிற் சிறந்த வராயிருக்குந்தன்மையே யன்றி வேறில்லை.

(தொடரும்)

எழுத்தும் புணர்ச்சியும்

[செல்லூர்க்கிழார், திரு. செ. ரெ. இராமசாமிபிள்ளை]

(சிலம்பு: உஅ, பரல் ; கஉ : ௩௬௧-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு இயற்கையாக ஒலிக்கும் தன்மையும், புணர்ப்பும், தமிழ்மரபும் அறியாத ஒரு சிலர், தம் தருக்கினால் 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' எனவும், 'கடல் மீனுக்கு நீளையிட்டதே சட்டம்' எனவும் வழங்கும் பழமொழிக் கேற்பப் புணர்ச்சி மரபைச் சிதைத்தும், வலி மெலி இடைமைகளின் இயற்கைநிலை தெரியாது பிற்கால மக்கள் மயங்குமாறு எழுத்துமரபுகளைக் கெடுத்து நூல்கள் எழுதித் தம் அறிவின்மையை உலகிடைப் பரப்புவாராயினர்; அவர் தம் அத்தகைய நூல்களுக்குப் பாராட்டு, அவைகளைப் புகழ்ந்து பேச ஒரு தனிக்கூட்டமெல்லாம் உள்ளன. இவைகளை எண்ணுங்கால் நகைப்பதா? அழுவதா? என்றே தோன்றுகின்றது! என்னே நம் தமிழினத்தார் கொள்கை!

பட்டம் பல பெற்று ஆங்கிலமும் தமிழும் கற்றுத் துறைபோய சிலரும் பட்டம் பதவிக்காகவோ தம் செல்வாக்கு நாட்டிடை மிகப் பரவி யிருப்பதன் காரணமாகவோ தாம் எழுதும் நூல்களில் நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு வேற்றுச் சொற்களைக் கலந்தெழுதி வெளியிட்டுத் தமிழ்மொழியைக் கறைப்படுத்தியுள்ளனர். இவ்வாறு எழுதி நூலுருவாக்கி நாட்டில் வெளிக்கொணரவிட்டால், தமிழ்மரபும், நல்ல தமிழும் எவ்வாறு வாழும்? 'உப்பு' இருக்க 'லவணம்' எதற்காக? லவணம் என்ற சொல், தமிழ் இயற்கையொலியோடு ஒத்துவருகின்றதா? 'வெந்நீர்' என்னும் அழகிய செந்தமிழ்ச்சொல் இருக்க 'ஹாட்வாட்டர்' எற்றுக்கோ? என்பதை எண்ணிப் பாரமின்! 'செந்திறத்த தமிழோசை வட சொல்லாகி' என்று, ஓர் ஆழ்வார் திருமங்கைமன்னர் தமிழுக்கு முதன்மை கூறுகின்றார். அவரைப்பரவும் அடியார்கள், வடமொழியே தமிழுக்கு மூலம் என்று மொழிகின்றனர்! அந்தோ தமிழகமே!

'உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்' என்பது, பழங்கால ஆன்றோர் திருமொழி. நிற்க.

புணர்ச்சிவிதிகளை அறிந்தும் அறியாதார் போன்று, வேண்டாதவைகளையும், ஒரு சொன்னீர்மைப்பட்டு நிற்கும் மொழித்தொடர்களையும் பிரித்தலும் இயைபுடைய சொற்களைத் தனித்தனியாகப் பிரித்தெழுதுதலும் ஒவ்வாதன.

விளையாட்டு என்பது ஒரு சொல்; இதனை விளை ஆட்டு என்று பிரித்தெழுதுகின்றனர். சிறுசிறு சொற்கள் சேர்ந்து ஒரு பொருளைக் குறிக்கின்றவற்றை வழக்காற்றிலும், நூலிலுங் காணலாம். அவைகளைத் தனித்தனிச் சொற்களாகப் புணர்த் தாது எழுதின், குறித்த பொருளைத் தாராததோடு வெறித்த பொருளையும் தருவனவாம். திருவாளர், கூறுங்கால், மட்டற்ற; போன்ற சொற்களைத் திரு ஆளர், கூறும் கால், மட்டு அற்ற எனப் பிரித்தெழுதினால், சொல்லின் யாற்றொழுக்குக் கெடுவதோடு அவைகள் வெவ்வேறு கவர்பட்ட பொருள்களையும் உணர்த்து வன வாகும். இதனை யறிந்து பிற்கால மொழிமரபுணர்ந்த பவ ணந்தியார்,

> 'எழுத்தியல் திரியாப் பொருள்திரி புணர்மொழி
> இசைத்திரி பால்தெளி வெய்து மென்ப.'

என, உண்மையைத் தெருட்டி யுணர்த்துவாராயினர்.

உள்ளங்கையும் விரல்களும் சேர்ந்த வொன்றே 'கை' யாகும். அவைகளுள், விரல்கள் இன்றி உள்ளங்கைமட்டும் இருப்பின் அது, கைக்குரிய வினையியற்றும் பான்மைகெட்டு, வறுங்கையாக இருத்தலைக் காண்டு மன்றோ? எனவே, அதனைக் கையெனக் கூறுதற்கில்லை. இதுபோன்றே பிரிக்கப்படுகின்ற ஒவ்வொரு சொல்லும் தம் பொருட்பயனையும் அதன் இயல்பை யும் ஒருங்கே இழந்து நிற்றலைக் காட்டுவதோடு அஃதோர் மொழியாக அமையாமையையும் அறிவிக்கும்.

தமிழ்நாடு என்னும் சொல்லை ஒன்றாக இணைத்தெழுதினால் தமிழ் வழங்கும் நாடெனப் பெயர்ச்சொல்லாக இருத்தலையும் இதனையே தமிழ் நாடு எனப் பிரித்தெழுதின் தமிழும் நாடும் என விரிக்கப்பெற்று உம்மைத்தொகைப் பொருள்தருதலையும், தமிழை நாடு என ஏவல் வினையாக இருத்தலையும் நன்கு காண லாம். எனவே, பிரிப்பதனாலும், புணர்ப்பதனாலும் பொருள் வேறுபாடு தோன்றல் அறிக. பொருள்நோக்கிப் பிரித்தல் வேண்டுமேயன்றி அஃதின்றிப் பிரிப்பது பொருள்தராது. அன் றியும் பல உரையாசிரியர்களும் வெளியீட்டகத்தாரும் பாட் டுக்களைக் கண்டகண்டபடி பிரிக்கின்றனர். பாட்டு, நாவோ டிசைந்த இயற்கைப்பண்புடையது; யாற்றொழுக்குப் போன்ற இடையறவுபடாத ஓசை இன்பமும் உடையது; அதைத் தனித் தனிச் சொற்களாகப் பிரிப்பினும், குற்றிய லுகர, முற்றிய லுக ரந்திரிந்த புணர்ச்சித்தொடரை வலிந்து பிரிப்பினும் பாட்டின் இன்னிசை கெடுதலோடு உரைநடைபோன்று இயக்கமடையும். அதினும் நம் தமிழ்மொழி இயற்கையையே தனக்கு உறுப்பாக

வுடையது. அதனைக் கெடுத்தலுமாகும். அப்படிப் பிரிப்பதனால் யாப்பிலக்கண நூலார் வகுத்த அலகு நிலை, வெண்பா இன்னது, ஆசிரியப்பா இன்னது என்னும் வரையறையின்றி யாவும் உரை நடைபோலாகிவிடும். அதனால் பிற்கால மக்கட்குப் பாவின்நிலை இன்னதென்றே அறிய இயலாததாகிவிடும். அதை எண்ணி யாவது பாட்டுக்களைத் தனித் தனிச் சொற்களாக வெட்டா திருத்தல் நன்றெனக் கேட்டுக்கொள்கின்றேம். காட்டாக:

'அகரம் முதல எழுத்து எல்லாம் ஆதி
பகவன் முதல்து ஏ உலகு'

என்று திருக்குறளில் வரும் பாட்டுக்களை யெல்லாம் இவ்வாறு பிரித்தெழுதினால் இதைக் குறள்வெண்பா என்று கூறுதல் பொருந்துமோ? எண்ணிப் பார்மின்!

ஒரு தந்தை தன் மகன் நன்கு ஊன்றிப் படித்தலைக் 'கருத் தாய்ப் படிக்கின்றான்' என்று கூறுவானே யல்லாமல் 'கருத்து ஆய்ப் படிக்கின்றான்' என்று தனித்தனியாகப் பிரித்துச் சொல்வ தில்லை; அப்படிச் சொல்லற்கும் இயற்கையாக வாராது. இஃது இயற்கை.

இவ்வாறு பேச்சு வழக்கிற்கூடச் சொற்கள் இணைப்புற்று வரும்போது செய்யுளில் இணையாது வருமா? அதனைப் பிரிப்ப தால் எவ்வளவு இடுக்கண் இருக்கின்றதென்பதை ஊன்றி யுணர்மின்.

பிரித்தெழுதிய இக்குறட்பா படித்தற்குச் சுவையின்றிப் பாவும் ஆகாது உரைநடையும் ஆகாது 'திரிசங்கு சுவர்க்க' மாக இருப்பதையும் அறிக.

செய்யுட்களையும் பிறவற்றின் சொற்றொடர்களையும் தமிழ் மரபு பேணுது பிரித்துக்கொண்டே போனால், தமிழுக்கென அமைந்த தொல்காப்பியம் போன்ற இலக்கணங்கள் வேண்டா. வேண்டாதாகவே, தமிழிலிருந்து மரபுதிரிந்து, கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு முதலிய பல்வேறு மொழிகளாகத் திரிந்து இற்றைநாள் வேற்றுமொழிகளாக வழக்காறுற்று வருத லைப் போன்று, இற்றைஞான்றைத் தமிழ்மொழியும் இவ்வாறு பிரித்தும் திரித்தும் எழுதுவதால் 'பிரிந்த தமிழ்' என்ற பெய ரால் மாறி வேறொரு தனிமொழியாக ஆதல் கூடும். அந்த அளவிற்கு நந்தமிழக அறிஞர்கள் போகமாட்டார்களென்னும் நம்பிக்கையுடையேன்.

தமிழ் நன்மக்களே! நுங்கள்பால் வெறுப்போ காழ்ப்போ கொண்டு இதனைப் பொறிக்கின்றேனில்லை. அளவின்றி இவ்வாறு

திருத்தஞ் செய்துகொண்டே சென்றால், இறுதியில் எந்த அள வில் சென்று நிற்குமென்று எண்ணிப் பார்மின்! அதற்காக வருந்தியே இதனை வரைவான்புக்கேன்.

தமிழை வளர்க்கவும் சீர்திருத்தவும் விரும்புவோர், வேற்று மொழிக் கலைகளை இங்கே கொணர்வாராக; இயற்கைக்கு முரணாகாமற் பிரிப்பார்களாக என, வேண்டிக்கொள்கின்றேம்.

'ஒன்றே செய்யவும் வேண்டும் ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும்'

என்னும் பெரியார் மொழியையும் உணர்ந்து தமிழை ஆட்சி மொழியாக்கி அரியணையேற்றி முதன்மையாக்க வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேம்.

தமிழ்மொழி வாழ்க! அதன் ஒலி வெல்க!

பொங்கல் வாழ்த்து

[செல்லூர்க்கிழார், திரு. சே. ரே. இராமசாமிபிள்ளை]

பொங்குக பொங்கல் பொங்குக பொங்கல்
எங்கணும் இன்பம் என்றும் பொங்குக
அன்பார் ஆவின் பாலொடு கட்டி
இன்பார் நீருடன் இசையக் குற்றிய
வெண்ணெல் அரிசியை விருப்புடன் கலந்து
பண்ணற் புதியமட் பானையிற் கோலமும்
மஞ்சட் கொத்துடன் வளமார் கரும்பும்
மிஞ்சவே நாரால் மேலிடஞ் செறித்து
மங்கல மங்கையர் மணிக்கையால் அடுப்பில்
தங்குற வைத்துத் தம்மணி நாவால்
குலவைக் குரலும் கொழுவிய சங்கும்
நலமிக வானம் நண்ண இசைத்தே
பால்மிகப் பொங்கப் பல்லாண்டு பாடி
வால்வெண் பொங்கற் சோற்றை மகிழ்வுடன்
எல்லாம் வல்ல இறைவற் கீத்து
மக்களும் ஒக்கலும் மற்றுங் கிளைஞரும்
தக்கஆ டவரொடு தானினி துண்டு
ஏழை மக்கள் இயங்குயிர் எதற்கும்
தாழல் இன்றித் தனித்தனி கொடுத்து
இன்புற்று வாழ வரும்தைப் பொங்கல்
பொங்குக பொங்கல் பொங்குக மகிழ்ச்சி
பொங்குக தமிழகம் புகழ்மிகப் பொங்குக.

ஓம்

திருச்சிற்றம்பலம்

வழிபாட்டு அடிப்படை

[சித்தாந்தபண்டிதர், திரு. ப. இராமநாதபிள்ளை]

வழிபாடு

வழிபாடு என்பது திருவருள் கைவந்த தவத்தோர் சென்ற வழியிலே அத் தவத்தோரைப் பின்பற்றிச் செல்லுவது எனப் பொருள் தரும். வழி+படு=வழிபாடு என்றாயிற்று. படுதல் என்னும் தொழிற் பெயரின் முதனிலை படு. அதுமுதல் நீண்டு பாடு எனலாயிற்று. அடிப்படை என்பது அடிக்கண் உள்ளது என்றாகும். இவ்விரு சொற்களும் கூடி எவ்வகையான வழி பாட்டிற்கும் முதற்கண் இன்றியமையாது வேண்டத்தக்கது எனப் பொருள்தரும். கடவுட்பூசை, ஆசிரியர் பூசை, பெரி யோர்பூசை, பெற்றோர்பூசை, மூத்தோர்பூசை முதலியன மட்டும்தான் வழிபாடு என்று கருதுகின்றோம். அதுமட்டும் அன்று. நாம் செய்யும் எல்லாச் செயலும் முறையிற் செய்யப் படின் அவையும் வழிபாடேயாகும்.

முறை

முறையிற் செய்தல் என்பது ஒவ்வொருவரும் அகம் புறம் தூயராய்க், கடவுள் நினைவும், கற்றோர் துணையும், நற்சார்பும் கைக்கொண்டு, அனைத்துயிர்க்கும் நலம் பயக்கும் அன்பருள் கலந்த இன்செயல்களை இனிதியற்றலாகும். அங்ஙனமாயின் உழைத்தல், உண்டல், உறவாடல், உரையாடல், உணர்தல், உறங் கல், இவை யாக்குவித்தல் முதலியனவும் மேற்கூறிய முறைப்படி அமையின் அவையும் வழிபாடே யாகும். அவற்றிற்கு வேண் டிய இன்றியமையாதன சிலவற்றை மட்டும் ஈண்டுத் தருகின்றாம். அதன்படி முதற்கண் அமைத்துக்கொண்டு எல்லா முயற்சியும் மேற்கொண்டு நல்லராய் வாழவேண்டுவது சான்றாண்மை மேற் கொண்டு ஒழுகுவார் அனைவர்க்கும் கடன் என்க.

முழுகல்

"வைகறைத் துயிலெழு" என்பது தமிழ்மூதாட்டியார் திருமொழி. "வைகுறுவிடியல் மருதம்" என்பது ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியம். மருதம் என்பது வயலும் வயல்சார்ந்த இடமும் என்ப. இந் நன்னிலமே மக்கட்பண்பு வளர்ந்து கண்ணோட்டமும், கடவுள் வழிபாடும் சிறந்து காவலும் மேவலும் மிகுந்து பொன்னும் பொருளும் பொலிந்து பிறக்

கென வாழும் பெற்றிமை வாய்ந்த பெரியோர் திகழ்ந்து உல கோம்புதற்கு உகந்த பெருநிலம் என்ப. நிலம் என்னும் நல் லாள் நல்கிய வளங்கொண்டே நாடு வாழ்தல்வேண்டும். அவ் வளம் சேர் விளைபொருள்களாலேயே கைத்தொழில் உண்டாதல் வேண்டும். விளைபொருள் அனைத்தும் மெய்ப்பொருளாம் முழு முதல்வன் உடைமை. விளைநிலமும் அவன் உடைமையே. விளைவிப்பாரும், விலைகொடுத்துப் பெறுவாரும் அவன் அடி மையே. ஆண்டவன் பொருளுக்கு விலை எங்ஙனம் வரையறுப் பது? "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு, என் ஞற்றுங் கொல்லோ உலகு." என்னும் தமிழ்மறைப்படி ஏதும் விலைகொடுக்க இயலாதென்பதுதான் பொருத்தம். எனவே, ஆறறிவுபடைத்த மக்களாகிய நாம் ஒருவருக்கு ஒருவர் செய்யும் பண்டமாற்றுதல் அனைத்தும் உண்மையான் நோக்குவார்க்கு ஒருவருக்கொருவராற்றும் உதவியென்றே அமையும் பண்ட மும் பணமும் அவரவர்பால் உள்ளன அன்புடன் உதவும் உதவிப் பொருள்களே. இப்பொருள்கள் அனைத்தும் பயக்கும் அருள் நிறை செஞ்சொல் "வேளாண்மை" என்ப. வேளாண்மை என்பது பிறர்க்குரிய இன்றியமையா விருப்பத்தினை நிறை வுறுத்தும் உதவி என்ப. வேள்—விருப்பம். ஆண்மை—உதவி யால் உயரச் செய்து தன் வழிப்படுத்தல். இத்தகைய வேளாண் மாந்தர் உறையும் மென்நிலம் மருதம். அதற்குரிய சிறுபொழுது வைகறையும் விடியலும். அதற்குரிய தெய்வம் வேந்தன். வேந்தன்—சிவபெருமான். இவனே போகம் ஈன்ற புண்ணியன். அம்மையப்பராக விளங்கும் கொன்றைக் கண்ணியன்.

சிறுபொழு தென்பது ஒருநாளை ஆறு கூறுசெய்வது. பெரும் பொழுது என்பது ஓர் ஆண்டை ஆறுகூறு செய்வது. மருதத்திற்கு உரிய சிறு பொழுது இரவு நாழிகை இருபதி லிருந்து முட்பதுவரையும் உள்ள பத்து நாழிகை ஆகும். இப் பத்து நாழிகையுள் முன் ஐந்து நாழிகை வைகறை யாகும்; பின் ஐந்து நாழிகை விடியலாகும். முதியோரும் தவத்தோரும் வைகறையில் விழித்தல் வேண்டும். இளைஞரும் ஏனையோரும் விடியலில் விழித்தல் வேண்டும். விடியற்காலம் என்பது நான்கு மணியின் தொடக்கமாகும். நான்கரை மணிக்குள் குளிர்ந்த நீரில் முழுகுதல் வேண்டும். இக்காலத்து நீர் தனிப்பெரு மின்னாற்றலுடன் திகழும். முழுகும்போது கூடிக்களித்துக் கடவுள் நினைவுடன் முழுகுதல் வேண்டும். முழுகும்போது ஓத வேண்டிய திருப்பாட்டு:

"களித்துக் கலந்ததொர் காதற் கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுதுமுன் னின்றவிப் பத்தரைக் கோதில்செந்தேன்

தெளித்துச் சுவையமு தூட்டி யமரர்கள் சூழிருப்ப
அளித்துப் பெரும்செல்வம் ஆக்குமஐ யாறன் அடித்தலமே.''
(௬. அப்பர், கஉ-எ)

களித்தல்: இன்புறுதல். கலத்தல்: குடும்பத்தாருடனும் நண்பருடனும் கூடுதல் காதல்: பேரன்பு. கசிவு: அன்பால் செய்யும் தொண்டு. காவிரிவாய்: காவிரியாற்றுத்துறை; சோலை சூழ்ந்த நீர்நிலை. தொழுது: நீறணிந்து வணங்குதல். பத்தர்: மெய்யன்பர். செந்தேன்—திருவடி நினைவு. சுவையமுது: அடிமை உணர்வு. அமரர்—அடியார் பேற்றை அவாவிய விண்ணவர். பெருஞ்செல்வம்: அடியாரிணக்கம்.

அகத்தூய்மை

அகத்தூய்மைக்கு அருள்துணையால் அறுபகை செறுதலும், ஐம்புலன் அடக்குதலும், அருள்வழி நிற்றலும் இன்றியமையாதன. இவைகிடைக்கப் பெற்றார் மெய்யுணர்வுச் செல்வராம் சிவபெருமான் திருவடியைப் புகலாகப் பெற்றுப் பேரின்பம் உற்று என்றும் ஒருபடித்தாய் வாழ்வர். இவர் நிலையே அடிமை நிலை

அறுபகை: க. செருக்கு, உ. சினம், ௩. சிறுமை, ௪. இவறல், ௫. மாண்பிறந்த மானம், ௬. மாணா உவகை. (காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம்.)

ஐம்புலன்: க. செவி, உ. மெய், ௩. கண், ௪. வாய், ௫. மூக்கு.

செந்தமிழ்ப் பொதுமறையளித்த திருவள்ளுவர் மேலனவற்றை அருளுவது வருமாறு:

"செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமிதம் நீர்த்து.
இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு." (௪௩க-உ)

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள." (கக0க)

அருள்வழி நிற்றல்: ஆவிகளுய்ய ஆண்டவன் உடல், கலன், உலகு, ஊண் முதலியவற்றைப் பேரருளால் மாயையினின்றும் படைத்து அவ் ஆவிகளுக்குக் கூட்டியருளினன். இந்நான்கும் தனுகரண புவனபோகம் என்ப. இவற்றுடன் கூடி அவ்வாவிகள் பண்டே புல்லிய மலநோய் விண்டகல அருள்வழி முயல்வவாயின. அம்முயற்சி ஆண்டவன் ஆணை. ஆணை எனினும் கட்டளை, ஏவல், பணிகள் எனினும்

ஒன்றே. ஆண்டவன் ஆணைவழி நிற்பார் அடிமை எனப் படுவர். தம் முனைப்பற்றவராவர். அவர் செய்யும் செயல்கள் அனைத்தும் மலநோய் நீங்கும் மருந்தாகும். தம் முனைப்பால் செய்வன மல நோய் நீக்கும் மருந்தாகிய வினையைப் பெருக்குவனவாகும். மருத்துவன் சொல்வழி மருந்துண்ணின் பழைய நோய் அகலும், புதிய நோய் அணுகாது. அம் முறையினைக் கடந்து நோயாளி தான் நினைத்த படி மருந்து உண்ணின் பழைய நோய் அகலினும் புதிய நோய் பல அணுகும். அதன் பொருட்டுப் பின்னரும் மருந்துண்ண வேண்டிவரும். இவற்றை விளக்கும் சிவஞான சித்தியார் திருமொழியும், கருத்தும் வருமாறு :

"அருளினு லுரைத்த நூலின் வழிவாரா ததன்மஞ் செய்யின்
இருளுலா நிரயத் துன்பத் திட்டிரும் பாவம் தீர்ப்பன்
பொருளுலாம் சுவர்க்க மாதி போகத்தாற் புணியந் தீர்ப்பன்
மருளுலாம் மலங்கள் தீர்க்கும் மருந்திவை வயித்திய நாதன்."

(சூ. உ. அதி. உ-௩௩)

["வேதாகம நூல்வழி நில்லாமை பாவம், நூல்வழி நின்று அருள்வழி நில்லாமை புண்ணியம், இரண்டும் உயிர்க்கு நோய்- சிவஞான முனிவர்.]

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு."

என்பதும் இக்கருத்தே யாகும்.

அறுபகை செறுதல் ஐம்புலன் அடக்கல் அருள்வழி நிற்றல் ஆகிய மூன்றும் அகத்தூய்மை வாயில்களாகும். அவற்றைத் தொகையாக நினைத்துக் கைக்கொள்ள ஓதவேண்டிய திருப்பாட்டு :

அகனமர்ந்த அன்பினராய் **அறுபகைசெற் றைம்புலனும் அடக்கி ஞானப் புகலுடையோர்** தம்முள்ளப் புண்டரிகத் துள்ளிருக்கும் புராணர்கோயில்
தகவுடைநீர் மணித்தலத்துச் சங்குளவர்க் கந்திகழச் சலசத் தீயுள்
மிகவுடைய புன்குமலர்ப் பொரியட்ட மணம்செய்யும் மிழலை யாமே.

இம் மூன்றும் திருஅருள் துணையால் நிகழவேண்டும். ஆதலின் அதன்பொருட்டு அன்புடன் ஓதவேண்டிய திருமுறைத் திருமாமறைகள் வருமாறு:

"நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
௫. ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க."

இதன்கண் ஆறு வாழ்த்துகள் அமைந்துள்ளன. இவற்றை அன்புடன் ஓதுவதால் 'செருக்கு' முதலிய ஆறு அகப் பகைகளும் அணுகா.

வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க.

இதன்கண் ஐந்து வெல்க வந்துள்ளன. அவற்றை அன்புடன் ஓத ஐம்புலனும் ஓதுவார்க்குத் துணையாய் அவர்பின் சென்று அடங்கும். அடங்குதல் நல்வழிப்படுதல். 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்பதும் காண்க.

ஈசன் அடிபோற்றி எந்தையடி போற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி.

இதன்கண் எட்டுப் போற்றிகள் திகழ்கின்றன. இவற்றை அன்புடன் ஓத ஆண்டான் திருவருள் விளக்கம் ஆகிய எண்குணங்களும் அகத்தே மிகும். மிகவே அவர் மெய்யடியாராவர். அவர் திருவடி மறவாச் சிறப்பினராவர். அவரே அருள்வழி நிற்பவர். அவரே பிறவாப் பெருவாழ்வு எய்திப் பேரின்பம் நுகரும் பெற்றியர்.

"சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கி."

என்னும் இத் தொடரைப் புகலும் 'பொய்யடிமை யில்லாத புலவர்' நெஞ்சினுள் இறைவன் முன்னின்று செலுத்துதலின் அவர் செய்யும் செயல் அனைத்தும் அருட்செயலே யாகும். அவரும் 'அவனருளாலே' அனைத்தும் செய்யும் அருங்குறிக்கோள் அகங்கொண்டொழுகும்' 'செயற்கரிய செய்வா'ராவர். அதுவே இருவினையுஞ் சேரா இறைபணி.

நாம் அனைவரும் முதற்கண் குறித்த 'அகனமர்ந்த அன்பினராய்' என்னும் தேவாரத்தினையும், இச் சிவபுராணத் திருத்தொடர் பதினெட்டினையும் அன்புடன் ஓதிச் "சிந்தைமகிழ" தொண்டுசெய்வாம் என நினைந்து கொண்டு எத்தொழிலும் செய்வோமாக. ஆண்டவன் அருள்வானாக.

உன்னடியேன் செய்பணிகள் உன்தொண்டே உன்அருளே
உன்னடிக்கே ஒப்புவித் தேன்.

பொங்குக இன்பப் பொங்கல்

[திரு. சோ. ந. கந்தசாமி, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.]

கவிந்திடும் இருளை நீக்கிக் கதிர்மதிக் கொளியை ஈந்து
குவிந்திடும் மலர்வாய் காட்டிக் கோதறு இயற்கை யெல்லாம்
சவியுறத் திகழு மாறு தகையொளி மழையைப் பாய்ச்சி
அவியுறா துலகைக் காக்கும் அருங் "கதிர்ப் பொங்கல்" வாழி!

குவலயம் குலவி வாழக் கொடுமைகள் தகைய வாழ்வின்
அவலமே அழிய அன்பின் அறமெலாம் ஒளிரப் பாரில்
நுவலருங் கலைகள் ஓங்க நெடிதுநாள் உழைக்கும் மேழித்
தவலரும் உழவர் பொங்கல் தமிழ்ப்பெரும் நன்னாள் வாழி! (௨)

மலைபுரை துன்பத் தாழ்ந்தும் மகிழ்வுடன் ஏர்கை தூக்கி
நிலமெலாம் உழுது வித்தி நீர்எரு நிறைய வட்டி
உலகெலாம் ஓங்கச் செய்யும் உணவுடைப் பொருள்கள் ஈந்து
தலைமுறை யாக வாழ்நர் "தைப்பொங்கல்" நன்னாள் வாழி! (௩)

பொன்னொளி காலுஞ் செந்நெற் பொற்புறும் இஞ்சி மஞ்சள்
கன்னல்நற் கதலிக் கோலம் கவினுறத் துலங்கப் "பொங்கல்"
மன்னிட உழவ ரெல்லாம் மாகவான் பருதி நோக்கிப்
பன்னறும் வாழ்த்துக் கூறும் பழந்தமிழ்ப் பொங்கல் வாழி! (௪)

மங்கைமார் தூநீ ராடி மலர்மடி யணிந்து பொங்கல்
பொங்கிடும் புதுக்கு டத்திற் புதுநெல்லின் அரிசி கூட்டிச்
செங்கரும் பினிய சாறும் தீம்பசுப் பாலும் வார்த்துப்
"பொங்கலோ பொங்கல்" என்னப் பொங்குக இன்பப்
பொங்கல்! (௫)

கடன்முறை தவறாச் செம்மல் கயக்கறும் உழவர் நட்பாய்
உடன்உழைத் தோங்கும் மாக்கள் உலப்பிலா இன்பம் பொங்க
தடக்குள நீரி லாட்டித் தகைபுனை மாலை சூட்டி
மடந்தைசெய் பொங்க லூட்டி மகிழ்ந்திடும் பொங்கல் வாழி!

கங்குலைச் சீக்குங் காலைக் கதிரவன் எழுந்தான் மானத்
தங்கநற் றமிழ்நூ லெல்லாம் தரணியிற் பரப்பி மேலைச்
செங்கலை தமிழிற் சேர்த்துத் தனித்தமிழ் நாடு காணப்
"பொங்கலோ பொங்கல்" என்னப் பொங்குக இன்பப்
பொங்கல்! (௭)

மறைவுற்ற தமிழ்நூல்கள்

[மயிலை. திரு. சீனி. வேங்கடசாமி]

(சிலம்பு: உக, பரல்: ச, கஎச-ஆம் பக்கத் தொடர்ச்சி)

107. சிறுகாக்கை பாடினியம்

சிறு காக்கை பாடினியார் என்பவர் இயற்றிய இந்நூலுக்குச் சிறுகாக்கை பாடினியம் என்னும் பெயர் சூட்டப்பட்டது. இது இலக்கண நூல். இவருக்கு முன்னர், காக்கை பாடினியார் என்னும் பெயருள்ள வேறொருவர் தம் பெயரால் காக்கைபாடினியம் என்னும் இலக்கணநூலைச் செய்திருத்தல் பற்றி, அவரின் இவர் வேறானவர் என்பதைக் குறிப்பதற்காகச் சிறு என்னும் அடைமொழி கொடுத்துச் சிறுகாக்கைப் பாடினியார் என்று வழங்கப்பட்டார்.

காக்கைபாடினியார் என்னும் பெயருள்ள இரண்டு ஆசிரியர் இருந்தனர் என்பதை உரையாசிரியர்கள் கூறுவதிலிருந்து அறிகிறோம். பேராசிரியர் (தொல்; பொருள், செய்யுளியில் 1-ஆம் சூத்திர உரையில்) இவ்வாறு எழுதுகிறார்:

"'இணை நூன் முடிபு தன்னூன் மேற்றே' என்பதனால் காக்கைபாடினியார் ஓதிய தளையிலக்கணம் ஈண்டுங்கோடல் வேண்டுமெனின், அஃதே கருத்தாயின் இவர்க்கும் அவர் முடிவே பற்றித் தளை தளையல்வேண்டும். அல்லதூஉம், அவர்க்கு இளையரான காக்கைபாடினியர் தளைகொண்டிலரென்பது இதனாற் பெற்றாம். தளைவேண்டினார் பிற்காலத்தோராசிரியரென்பது இதனாற் பெற்றாம். என்னை?

'வடக்குந் தெற்குங் குணக்குங் குடக்கும்
வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றிந்நான் கெல்லை யகவயிற் கிடந்த
நூலதி னுண்மை வாலிதின் விரிப்பின்'

எனக்கூறி வடவேங்கடத் தென்குமரியெனப் பனம்பாரனார் கூறியவற்றானே எல்லை கண்டார் காக்கைபாடினியார்: ஒழிந்த காக்கை பாடினியத்து,

'வடதிசை மருங்கின் வடுகு வரம்பாகத்
தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்'

எனத் தென்றிசையுங் கடலெல்லையாகக் கூறப்பட்டதாகலான் அவர் குமரியாறுள்ள காலத்தாரல்ல ரென்பதூஉம், குறும்பனை நாடு அவர்க்கு நீக்கல் வேண்டுவதன்றென்பதூஉம் பெற்றாம்.

பெறவே, அவர் இவரோடு ஒருசாலை மாணாக்கர் அல்லரென்பது எல்லார்க்கும் உணரல் வேண்டுமென்பது.''

மேலும் பேராசிரியர் எழுதுகிறார் :—'' பிற்காலத்துக் காக்கைப் பாடினியாரும் தொல்காப்பியரோடு பொருந்தவே நூல் செய்தாரென்பது. மற்று,

'வடதிசை மருங்கின் வடுகுவரம் பாகத்
தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்
வரைமருள் புணரியொடு கரைபொருது கிடந்த
நாட்டியல் வழக்க நான்மையின் கடைக்கண்
யாப்பின திலக்கண மறைகுவன் முறையே'

எனத் தெற்குக் குமரியன்றிக் கடலெல்லையாகிய காலத்துச் சிறு காக்கைபாடினியார் செய்த நூலினையும் அதன் வழிநூலென் னுமோ வெனின், ஈண்டுக்கூறிய பொருளெல்லாந் தழுவு மாற்றாற் செய்தது ஆராயின், அது வழிநூலாதற்கு இழுக்கென்னை யென்க.'' (தொல் : பொருள் : மரபு : 95-ஆம் சூத்திர உரை)

யாப்பருங்கலம் செய்யுளியல் 3-ஆம் சூத்திரமாகிய

'தாழிசை துறையே விருத்த மென்றிவை
பாவினம் பாவொடு பாற்பட் டியலும்.'

என்பதற்கு உரையெழுதிய விருத்தியுரைகாரர் இவ்வாறு எழுது கிறார் :—''விருத்தம் துறை தாழிசையென்று காக்கைபாடினியார் வைத்த முறைமையின் வையாது தாழிசை துறை விருத்த மென்று தம் (அமிர்த சாகரனார்) மதம்பட வைத்ததன்று ; சிறு காக்கைபாடினியார் முதலாகிய ஒருசா ராசிரியர் வைத்த முறைமை பற்றி வைத்தாரென்க.''

இதனால், காக்கைபாடினியார் என்னும் பெயருள்ள புலவர் இருவர் இருந்தனர் என்பதும், அவர்கள் தத்தம் பெய ரால் காக்கை பாடினியம் என்னும் இலக்கண நூலைச் செய்தனர் என்பதும், அவர்களில் ஒருவர் தொல்காப்பியர் காலத்திலும், மற்றவர் பல நூற்றாண்டுக்குப் பின்னர் குமரியாறு கடல் கொள்ளப்பட்ட பிறகு இருந்தவர் என்பதும், இவ்விருவரையும் பிரித்துக் காட்டும் பொருட்டுப் பிற்காலத்தவர் சிறு என்னும் அடைமொழிகொடுத்துப் பிற்காலத்திருந்த காக்கைபாடினி யாரைச் சிறுகாக்கை பாடினியார் என்று வழங்கினார்கள் என்ப தும் தெரிகின்றன.

சிறுகாக்கை பாடினியாரைப் பற்றியும் அவர் இயற்றிய சிறுகாக்கை பாடினியம் என்னும் இலக்கணநூலைப்பற்றியும் வேறு செய்திகள் தெரியவில்லை.

சிறுகாக்கைபாடினியச் சூத்திரங்கள் சிலவற்றை யாப்பருங்கல விருத்தியுரைகாரர் தமது உரையில் மேற்கோள் காட்டுகிறார். அச்சூத்திரங்கள் இவை :—

குறிய நெடிய வுயிருறுப் புயிர்மெய்
வலிய மெலிய விடைமை யளபெடை
மூவுயிர்க் குறுக்கமு மாமிசைக் கெழுத்தே. 1

தனிநெடி லாகியுந் தனிக்குறி லாகியு
மொற்றொடு வந்து நேரசை யாகும். 2

குறிலிணை யாகியுங் குறினெடி லாகியு
மொற்றொடு வந்து நிரையசை யாகும். 3

இடையுங் கடையு மிணையுமை யெழுத்தே. 4

ஈரசை யாகிய மூவகைச் சீர்தான்
நேரிதின் வெள்ளை நிரையிறின் வஞ்சி. 5

நடுவுநே ரியலா வஞ்சி யுரிச்சீ
ருரிமை யுடைய வாசிரியத் துள்ளே. 6

இயற்சீ ரொன்று நிலையது வெண்டளை
உரிச்சீ ரதனி லொன்றுத லியல்பே. 7

ஈரசை யியற்சீ ரொன்றிய நிலைமை
யாசிரி யத்தளை யாகு மென்ப. 8

வெண்சீ ரிறுதி நிரைவரிற் கலித்தளை
வஞ்சி வகைமை வரைவின் றாகும். 9

வஞ்சி யல்லா மூவகைப் பாவும்
எஞ்சுத லிலவே நாற்சீ ரடிவகை. 10

முதலெழுத் தொன்றி முடிவது மோனை
யேனைய தொன்றி னெதுகைத் தொடையே
யறுப்பி னொன்றின் விகற்பமு மப்பா
னெறிப்பட வந்தன நேரப் படுமே. 11

(இச்சூத்திரம் காக்கை பாடினியார் சூத்திரம் என்றும் கூறப்படுகிறது.)

சொல்லிசை யளபெழ நிற்பதை யளபெடை. 12

ஒன்றிய தொடையொடும் விகற்பந் தன்னொடு
மொன்றாது கிடப்பது செந்தொடை யாமே. 13

பல்வகைத் தொடையொரு பாவினிற் றொடுப்பிற்
சொல்லிய முதற்றொடை சொல்லினர் கொளலே. 14

பாவே தாழிசை துறையே விருத்தமெனா
நால்வகைப் பாவு நானான் காகும். 15

ஒன்றும் பலவும் விகற்பாய்த் தனிச்சொ
லின்றி வருவன வின்னிசை வெண்பா. 16

தொடைபல தொடுப்பன பஃறொடை வெண்பா. 17

அடிமூன் றாகி வெண்பாப் போல
விறுவன மூன்றே வெள்ளொத் தாழிசை. 18

நான்கு மூன்று மடிதொறுந் தனிச்சொற்
றோன்ற வருவன வெளிவிருத் தம்மே. 19

இருசீ ரடிமே லொருசீர் குறையடி
பெறுவன நேரிசை யாசிரி யம்மே. 20

இடையிடை சீர்தபி னிணைக்குற ளாகும். 21
கொண்ட வடிமுத லாயொத் திறுவது
மண்டில யாப்பெனா வகுத்தனர் புலவர். 22

அடிமூன் றொத்திறி னொத்தா ழிசையே. 23

அறுசீ ரெழுசீ ரடிமிக வரூஉ
முறைமைய நாலடி விருத்த மாகும். 24

தரவே தாழிசை தனிச்சொற் சுரிதகம்
வருவன வெல்லாந் தாழிசைக் கலியே. .25

சேர்த்திய தரவொடு தாழிசைப் பின்னர்
நீர்த்திரை போல நெறிமையிற் சுருங்கி
மூவகை யென்னு முறைமையின் வழாஅ
வளவின வெல்லா மம்போ தரங்கம். 26

அந்த வடிமிக் கல்லா வடியே
தந்தமு ளொப்பன கலித்தா ழிசையே. 27

நாற்சீர் நாலடி கலிவிருத் தம்மே. 28

எஞ்சா விருசீர் நாலடி மூன்றெனில்
வஞ்சித் தாழிசை தனிவரிற் றுறையே. 29

முச்சீர் நாலடி யொத்தவை வரினே
வஞ்சி விருத்த மென்றனர் கொளலே. 30

தனிச்சொல் லென்ப தடிமுதற் பொருளொடு
தனித்தனி நடக்கும் வஞ்சியு ளீறே. 31

108. சித்தாந்தத் தோகை

சிவஞான சித்தியார், நீலகேசி என்னும் நூல்களின் உரைகளிலிருந்து இப்பெயருள்ள நூல் ஒன்று இருந்ததென்பது தெரிகிறது. இது பௌத்த சமய நூல். ஞானப்பிரகாசர், சிவஞான சித்தியார் (பரபக்கம் : சௌத்திராந்தகன் மதம் 2 - ஆம் செய்யுள்) உரையில் சித்தாந்தத் தொகையிலிருந்து ஒரு செய்யுளை மேற்கோள் காட்டுகிறார். அவர் காட்டுவது :

"'அருணெறியாற் பாரமிதை யாறைந்து முடனடக்கிப்
பொருண் முழுதும் போதிநிழ னன்குணர்ந்த முனிவரன்றன்'
இஃதவர்கள் (பௌத்தர்கள்) சித்தாந்தத் தொகை."

சித்தாந்தத் தொகையிலிருந்து இந்த இரண்டடிகளை மட்டும் மேற்கோள் காட்டிய உரையாசிரியர், ஷை சித்தியார் (சௌத்திராந்திகன் மதம் 31 - ம் செய்யுள்) உரையில் இச் செய்யுள் முழுவதையும் மேற்கோள் காட்டுகிறார். அது,

"அருணெறியாற் பாரமிதை யாறைந்து முடனடக்கிப்
பொருண்முழுதும் போதியின்கீழ் முழுதுணர்ந்த முனிவரன்தன்
அருண்மொழியா னல்வாய்மை யறிந்தவரே பிறப்பறுப்பார்
மருணெறியாம் பிறநூலும் மயக்கறுக்கு மாறுளதோ.'

என்பது.

நீலகேசிக்கு உரையெழுதிய சமய திவாகர வாமன முனிவர், (புத்தவாதச் சருக்கம் 64 - ஆம் செய்யுள் உரை) சித்தாந்தத் தொகையிலிருந்து ஒரு பாட்டின் ஓர் அடியை மட்டும் மேற்கோள் காட்டுகிறார். அது, "மருடரு மனம் வாய் மெய்யிற் கொலைமுதல் வினைபத்தாமே, என்பது சித்தாந்தத் தொகை" என்பது.

பௌத்த சமய சித்தாந்தங்களைத் தொகுத்துக் கூறுவது இந்நூல் என்பது தெரிகிறது. இந்நூலைப்பற்றி வேறு செய்திகள் தெரியவில்லை.

109. திருப்பதிகம்

இப்பெயருள்ள பௌத்த சமய நூல் ஒன்று இருந்ததென்பது சிவஞான சித்தியார், நீலகேசி என்னும் நூல்களின் உரைகளிலிருந்து தெரிகிறது. சிவஞான சித்தியார் (சௌத்திராந்திகன் மதம் 2 - ஆம் செய்யுள்) உரையில் ஞானப்பிரகாசர் இந்நூலிலிருந்து இச்செய்யுளை மேற்கோள் காட்டுகிறார் :

"எண்ணிகந்த காலங்க ளெம்பொருட்டான் மிகவுழன்
றெண்ணிகந்த காலங்க ளிருடீர வொருங்குணர்ந்து
மெண்ணிகந்த தானமுஞ் சீலமு மிவையாக்கி
எண்ணிகந்த குணத்தினு னெம்பெருமா னல்லனே."

இச்செய்யுளை மேற்கோள் காட்டிய பின்னர், 'இது திருப்பதிக மெனக் கொள்க' என்று எழுதுகிறார். சிவஞான சித்தியார், சௌத்திராந்திகன் மதமறுதலை 8 - ஆம் செய்யுள் உரையிலும் இதே செய்யுளை மேற்கோள் காட்டுகிறார்.

நீலகேசி கடவுள் வாழ்த்து உரையில், பௌத்த மதத்தைக் கண்டிக்கும் இடத்தில், சமய திவாகர வாமன முனிவர் இந்தச் செய்யுளையும் மற்றொரு செய்யுளையும் மேற்கோள் காட்டுகிறார். ஆனால், இச்செய்யுள்கள் எந்த நூலைச் சேர்ந்தவை என்பதைக் கூறவில்லை. கூறவில்லையாயினும், இச் செய்யுள்கள் ஞானப்பிர காசர் குறிப்பிடுகிற திருப்பதிகம் என்னும் நூலைச் சேர்ந்தவை என்பது தெளிவாகத் தெரிகிறது. சமய திவாகர வாமன முனி வர் மேற்கோள் காட்டும் செய்யுள்கள் இவை :—

என்றுதா னுலகுய்யக்கோ ளெண்ணினு னதுமுதலாச்
சென்றிரந் தார்க்கீந்தனன் பொருளுடம் புறுப்புக்க
டென்றினன் பிறக்குந னுளனுயின் மாமேருக்
குன்றியின் றுணையாகக் கொடுத்திட்டா னல்லனே.

எண்ணிகந்த காலங்க ளெம்பொருட்டான் மிகையுளந்
தெண்ணிகந்த வுலோகங்க ளிருடீர வொருங்குணர்ந்
தெண்ணிகந்த தானமுஞ் சீலமு மிதையாக்கி
யெண்ணிகந்த குணத்தினு னெம்பெருமா னல்லனே.

திருப்பதிகம் என்னும் இந்நூலைப்பற்றியும் இதன் ஆசிரிய ரைப்பற்றியும் வேறு செய்திகள் தெரியவில்லை.

110. சாந்தி புராணம்

சாந்தி புராணம் என்னும் பெயருள்ள நூல் ஒன்று இருந் தது என்பதை, அப் புராணத்திலிருந்து ஒன்பது செய்யுள்கள் புறத்திரட்டு என்னும் தொகைநூலில் தொகுக்கப்பட்டதி லிருந்து அறியலாம். இது சமண சமய நூல். இப்போது இந் நூல் மறைந்துவிட்டது.

சாந்தி புராணம் என்பது சாந்திநாதர் என்பவருடைய வர லாற்றைக் கூறும் நூல். சாந்திநாதர், சைனருடைய இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களுள் பதினாறாவது தீர்த்தங்கரர் ஆவார். இவருடைய வரலாறு ஸ்ரீபுராணம் என்னும் மணிப்பிரவாள

வசன நூலிலும், திரிசஷ்டி சலாகாபுருஷ சரித்திரம் (அறுபத்து மூன்று பெரியார் சரித்திரம்) என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.

அஸ்தினபுரத்துக் குருவம்சத்தில் அரச குமாரனாகப் பிறந்து சக்கரவர்த்தியாக விளங்கிப் பின்னர் துறவு பூண்டு கேவலஞானம் பெற்றுத் தீர்த்தங்கரராக வாழ்ந்து சைனமதத்தை உலகத்திலே பரவச்செய்து இறுதியில் மோட்சமடைந்தார்.

இவருடைய சரித்திரத்திலே இவருடைய பதினொரு முற்பிறப்பு வரலாறுகள் கூறப்படுகின்றன. பரத கண்டத்தில் இரத்தின புரத்தின் அரசனாக ஸ்ரீசேனன் என்னும் பெயருடன் முதலில் பிறந்தார். பிறகு உத்தரகுருவில் பிறந்தார். அங்கிருந்து தேவலோகத்தில் தேவனாகப் பிறந்தார். பிறகு இரதநூபுரத்து அரச குடும்பத்தில் அமிததேஜஸ் என்னும் அரசனாகப் பிறந்தார். பின்னர் நந்திதாவர்த்த தேவலோகத்திலே மீண்டும் தேவனாகப் பிறந்தார். பிறகு மீண்டும் பரத கண்டத்திலே சுபாநகரத்து அரச குடும்பத்திலே அபராஜிதர் என்னும் அரசனாகப் பிறந்தார். இந்தப் பிறப்புக்குப் பிறகு அச்சுத தேவலோகத்திலே இந்திரனாகப் பிறந்தார். பின்னர் மீண்டும் ரதன சஞ்சய நகரத்திலே வஞ்சராயுதன் என்னும் அரசனாகப் பிறந்தார். பிறகு ஒன்பதாவது பிறவியிலே அகமிந்திர தேவனாகத் தேவலோகத்திலே பிறந்தார். மீண்டும், பத்தாவது பிறவியிலே புண்டரீகினி நகரத்திலே மேகரதன் என்னும் அரசனாகப் பிறந்தார். மீண்டும் அங்கிருந்து சர்வார்த்தசித்தி என்னும் தெய்வலோகத்திலே தேவனாகப் பிறந்தார். கடைசியாக, முன்னமே கூறியது போல, அஸ்தினபுரத்திலே சாந்திநாதர் என்னும் பெயருள்ள அரசனாகப் பிறந்து சக்கரவர்த்தியாக விளங்கி இறுதியில் தீர்த்தங்கரராக வாழ்ந்து வீடுபேறடைந்தார்.

இவருடைய முற்பிறப்புச் செய்திகள் இவருடைய வரலாற்றில் மிக விரிவாகக் கூறப்படுகின்றன. சாந்தி புராணமும் இந்த வரலாறுகளைக் கூறுகிற நூலாக இருக்கவேண்டும். சாந்தி புராணத்தைப் பாடிய புலவர் யார், அவர் எந்தக் காலத்தில் இருந்தார் என்பன தெரியவில்லை. இப்புராணம் இப்போது மறைந்துவிட்டது. இந்நூலிலிருந்து நமக்குக் கிடைத்திருப்பவை ஒன்பது செய்யுள்களே. இச்செய்யுள்கள் புறத்திரட்டு என்னும் நூலில் தொகுக்கப்பட்டுள்ளன என்று முன்னமே கூறினோம். இச்செய்யுள்கள் இனிமையாக உள்ளன :—

ஆயிரங் கதிருடை யருக்கன் பாம்பினால்
ஆயிரங் கதிரொடும் மழுங்கக் கண்டுகொல்

ஆயிரங் கண்ணுடை யமரர் கோனுமோர்
ஆயிரம் அமைச்சர்சொல் வழியின் ஆயதே. 1

நாயும் போல்வர்பல் லெச்சில் நச்சலால்
தீயும் போல்வர் செய்ந் நன்றி சிதைத்தலால்
நோயும்போல்வர் நுகர்தற் கருமையால்
வேயும் போல்வரிவ் வேனெடுங் கண்ணினார். 2

தோளும் மென்முலை யும்மல்குற் பாரமும்
நாளும் நாளும் நவின்று பருகிய
கேள்வன் மார்க்கும் பகைஞர்க்கு மொத்தலால்
வாளும் போல்வரிவ் வேனெடுங் கண்ணினார். 3

தானத்துக் குரித்து மன்று தன்கிளைக் கீயிற் சால
ஈனத்தில் உய்க்கும் நிற்கும் எச்சத்தை யிகழப் பண்ணும்
மானத்தை யழிக்கும் துய்க்கின் மற்றவர்க் கடிமை யாக்கும்
ஊனத்து நரகத் துய்க்கும் பிறர்பொருள் உவக்கில் வேந்தே. 4

கிளருமெரி விடமெழுதல் விழுதல்முத லாய
அளவிலரு நரகில்வரு நவைபலவு மஞ்சின்
உளமொழிமெய் நெறியொழுகி யுறுபொருள் சிதைக்கும்
களவுவிழை வொழிதல்கட னுக்கனி நன்றே. 5

பிளவுகெழு வெழுநரக மெரிகொளுவ லீர்தல்
இளையவுடல் தடிவொடுறு துயரம்விளை விக்கும்
கிளையறவு தருமரிய புகழினை யழிக்குங்
களவுநனி விடுதலற மென்றுகரு தென்றான். 6

கனிந்தநெய்க் கவளங்கையில் வைத்துடன் கழறுவாரை
முனிந்திடு களிறுபோல்வார் முத்தியை விளக்குநீராற்
மனங்கொளத் துறந்திடாதே வால்குழைத் தெச்சிற்கோடும்
சுணங்கனைப் போலும்நீரார் பற்றிடைச் சுழலும்நீரார். 7

ஆனை யூற்றின் மீன்சுவையின் அசுண மிசையின் அளிநாற்றத்
தேனைப் பதங்க முருவங்கண் டிடுக்க ணெய்து மிவையெல்லாம்
கான மயிலின் சாயலார் காட்டிக் கௌவை விளைத்தலான்
மான மாந்தர் எவன்கொலோ வரையா தவரை வைப்பதே. 8

விண்ணில் இன்பமும் வீதல் கேட்டுமால்
மண்ணில் இன்பமும் மாய்தல் காண்டுமால்
எண்ணில் இன்பமாம் ஈறி லாததே
நண்ணி நாமினி நயக்கற் பாலதே. 9

(தொடரும்)

தமிழிசை பன்னிரண்டாம்விழா

[செல்லூர்க்கிழார், திரு. செ. ரெ. இராமசாமிபிள்ளை]

தமிழோடிசை பாடல் மறந்தறியாப் பண்டைக் காலத் தமிழகத்தில் நம் செந்தமிழ் இயல் இசை நாடகமென மூவ்வகையாகப் பிரிவு பெற்று வளர்ச்சி யுற்றது. இடையில் நிகழ்ந்த மாறுபாட்டால் இசையும் வளர்ச்சி குன்றியது. இதனை யுணர்ந்தனர் கூரிய அறிஞர். மீண்டும் அதற்கு உயிர் கொடுத்து மீட்டனர். அவருள் உளதாகும், நுண்ணுடல் பெற்ற பெருந்திருவாளர்களான செட்டிநாட்டு வேந்தர் ராசா சர் அண்ணாமலை செட்டியாரவர்களும், ரா. க. சண்முகஞ் செட்டியாரவர்களும் முதலிடம் பெற்றவர்களாவர். இவ்விருவர்களால் புத்துடல் பெற்று நம் தமிழிசை மதிக்கொழுந்தென நாடொறும் வளர்ந்து வருகின்றது.

இத் தமிழிசை வளத்துக்குத் தனிச் சங்கமும், அதற்கென விண் தொடநிவந்த மேன்மாட மாளிகையும் சென்னையில் எழுப்பப் பெற்றுள்ளன. மாண்புற இசை பெற்று வளரும் தமிழிசைச் சங்கம் பல மாணவர்க்கும் தமிழிசையை ஊட்டி வருவது பெரு மகிழ்வுக்குரியதாகும். இச் சங்கத்துக்குப் பன்னிரண்டாம் விழா சென்னைத் தமிழிசைச் சங்க மாளிகையான அண்ணாமலை மன்றத்தில் 24-12-54 மாலை 5 மணிக்குத் துவங்கி 3-1-55-ஆம் நாள்வரை நிகழ்வுற்றது.

இதற்குச் சென்னை மாநில முதலமைச்சர் திரு. கே. காமராசு அவர்கள் திறப்பாளராகவும், பன்மொழிப் புலவர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரவர்கள் தலைவராகவும் சங்கத் தலைவர் திரு. சி. எஸ். இரத்தினசபாபதி முதலியாரவர்கள் வரவேற்பாளராகவும் அமைந்தனர்.

தமிழிசையில் ஆர்வமிக்க அன்பர்கள் பலரும், பொதுமக்களும் கலந்து சூழ்ந்து அவையில் அமர்ந்தனர். அதுகாலை திரு. சி. எஸ். இரத்தினசபாபதி முதலியாரவர்கள் தம் அரிய வரவேற்புரையை நிகழ்த்தித் திறப்பாளர், அவைத் தலைவர் முதலிய யாவர்களுக்கும் முகமன் கூறி வரவேற்றனர்.

பின்னர் முதலமைச்சர் திரு. கே. காமராசர் அவர்கள் விழாவைத் துவங்கி வைத்தனர். அப்பால் பேராசிரியர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரவர்கள் அரிய தலைமைப் பொழிவாற்றி மக்களை இன்புறச் செய்தனர். அப்பால் மாலை 6 மணிக்கு இசையரசு திரு. எம். எம். தண்டபாணி தேசிகரவர்கள் இசையரங்கு நிகழ்வுற்று, இரவு 9-30-க்கு மேல் குளிக்கரை பிச்சையப்பா அவர்களின் நாதசுர இன்னிசையுடன் முதல் நாள் நிகழ்ச்சிகள் முடிபுற்றன.

அப்பால் 25-12-54-ஆம் நாள் நடனமும் இசையரங்கும் நிகழ்வுற்றன. 26-12-54-ஆம் நாள்முதல் 29-12-54-ஆம் நாள்வரை நான்கு நாட்கள் தேவாரப்பண் ஆராய்ச்சிக் கூட்டம் நிகழ்ந்து பல பண்களைப் பற்றி ஆராய்ந்து முடிவு செய்தது. 3-1-55-இல் தமிழிசை விழா முற்றுற்றது. யாண்டுதோறும் தமிழிசை வளர்ந்தோங்குக.

தமிழ்ப்புலவர் மாணவர் தேர்வு

திருநெல்வேலி, தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தார் ஆண்டுதோறும் நடத்திவரும் இத்தேர்வு இவ்வாண்டு, **பிப்ரவரித் திங்கள் 21வ முதல்** ஆறு நாட்கள் நடைபெறும். சென்னை மாநிலத்திலுள்ள புலவர் கல்லூரிகளும், இண்டர் D - பிரிவுத் தமிழ் நடத்தும் கல்லூரிகளும், இலங்கை முதலிய குறித்த சில இடங்களும் தேர்வு நடைபெறும் இடங்களாம்.

வித்துவான் இறுதிநிலை, வித்துவான் முதனிலை, வித்துவான் புகுமுகவகுப்பு இவற்றிற்கு விண்ணப்பித்துள்ளவர்களும், சென்னைப் பல்கலைக் கழக இண்டர் D பிரிவுத் தமிழ்ப்பாடம் எடுத்திருப்பவர்களும் (வித்துவான் முதனிலைத் தேர்வுக்கு) விண்ணப்பித்துத் தேர்ச்சி பெறலாம். இண்டர் D-பிரிவு மாணவர்கட்குத் தனிப் பரிசும் வழங்கப்படும். இதுவரை விண்ணப்பம் செய்யாதவர்கள், 25-1-1955-க்குள் கீழ்க்கண்ட முகவரிக்குக் கட்டணத்துடன் விண்ணப்பித்துக் கொள்ளலாம். தமிழ்ப் புலவர்கள் ஆசிரியர்கள் துணை பெரிதும் வேண்டப்படுகிறது

பு. சி. புன்னைவனநாதன்,
புலவர்குழுத் தலைவர்
தென்னிந்திய தமிழ்ச் சங்கம், திருநெல்வேலி நகர்.

செய்திகளும் குறிப்புக்களும்

(க) **தமிழிசை பற்றிக் காமராசர் கருத்துரை**

தமிழிசைச் சங்கத்தின் 12-ஆம் ஆண்டு விழாவை 24-12-54-இல் துவக்கிவைத்த சென்னை மாநில முதலமைச்சர் திரு. கே. காமராசர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

'தமிழ் நாட்டிலே தமிழில் பாடவேண்டியதற்கு ஒரு போராட்டம் நடக்க வேண்டுவது முறைமையா? ஏன் போராட்டம் நடக்கிறது? மக்களில் வசதி பெற்றுள்ள சிலர், தங்கட்குக் கிடைத்துள்ள வாய்ப்புக்களை நன்கு பயன்படுத்திக் கொண்டிருப்பதனாலே அரசியல், பொருளாதாரம், சமூகம் முதலிய எல்லாத் துறைகளிலும் இதே நிலைதான்; ஏற்கெனவே பெற்றுக் கொண்டுள்ள வசதிகளை எளிதில் விட்டுக் கொடுக்க மாட்டார்கள்; இது இயற்கை; இதனால் போராட்டம் ஏற்படுகிறது.

ஆங்கிலத்தில் பேசினால்தான் திறமை பெற்றவன் என்று நினைக்குங் காலம் இருந்தது. தாய் மொழியில் பேசினால் பெருமை கொடுக்கும் நிலை அரசியல் கிளர்ச்சியின் பின்பு ஏற்பட்டது. மற்றவர்களுக்குத் தெரியாததைத் தங்களிடமே வைத்துக் கொண்டால்தான் தங்களுக்குள்ள வசதிகளைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும் என்ற எண்ணம். அதே போலத்தான் பாட்டுக்களும்..............இன்னும் சிறிது நாள் போனால் தமிழைத் தவிர வேறு எந்த மொழியில் பாடினாலும் கேட்பதற்கு ஆளிருக்கமாட்டார்கள். அத்தகைய காலமும் விரைவில் வந்துவிடும். எத்துறையிலும் மறுமலர்ச்சி ஏற்படும் போதெல்லாம் ஏற்கெனவே வசதி பெற்றிருப்பவர்கள் எதிர்ப்பது இயற்கையே' என்றார்.

குறிப்பு: நம் நாட்டில் தமிழுக்கு ஆக்கமென்று எத்துறையில் வந்தாலும் அதை எதிர்த்து முட்டுக்கட்டை கொடுப்பதையே ஒரு குழுவினர் இயற்கைப் பண்பாடாகக் கொண்டுள்ளனர். அதனை நன்குணர்ந்து உரைத்த முதலமைச்சரின் மதிநல மாண்பைப் பாராட்டுகின்றோம்.

(உ) குன்றக்குடி அடிகளாரின் மலேயாச் செலவு

அடிகள் சென்ற 28-12-54-இல் மலேயாவுக்குச் செல்லும் 'ரஜுலா' என்னும் நாவாயில் புறப்பட்டுச் சென்றுள்ளார்கள். அவர்கள் செல்லுங்கால் பல அன்பர்கள் வாழ்த்தி வணங்கி, வழியனுப்புமுகமன் வழங்கினர். அப்போது அடிகள் குறிப்பிட்டதாவது :

'நமது உயிர்நாடியான அருள்நெறியை வளர்க்கும் பணிகளில் மீண்டும் புதிய ஆர்வத்துடன் ஈடுபடுமாறு கேட்டுக் கொள்கின்றேன். கடல் கடந்து, நான் அருள்நெறித் திருக் கூட்டத்தின் உங்கள் எளிய ஊழியனாகத்தான் செல்கின்றேன். தமிழ் நாட்டு அருள்நெறித் திருக் கூட்டத் தலைவரும், செயலாளர்களும், செந்நாப்புலவர்களும், தலைசிறந்த தொண்டர்களும் தொடர்ந்து பணி செய்யுங்கள். தமிழகம் முழுவதும் நிறைவுற்ற அருள்நெறி நிலமாக அமைய நாமெல்லோரும் ஓவாது உழைக்க வேண்டும். அதுவே, நம் தத்துவம். நெஞ்சொடு நெஞ்சு கலந்த தொண்டர்களுக்கு எனது உளங்கனிந்த வணக்கம்.' என்று தம்மை வழியனுப்ப வந்த அன்பர்களுக்கு வாழ்த்துரையோடு கலந்து உரைத்துச் சென்றனர்.

குறிப்பு: அடிகள் மலேயாச்செலவை இனிதாகத் திருஞானசம்பந்தப் பெருமான்போல் முடித்துக்கொண்டு, நம் தமிழகத்துக்கு மீண்டும்போந்து, செந்தமிழ் மொழிக்கும் திருநெறிக்கும் வேண்டும் ஆக்கம் செய்து நலனுடன் வாழ இறையருளை வேண்டுகின்றோம்.

மதிப்புரை

ஒளிவிளக்குகள்

[**ஆசிரியர்:** டாக்டர், பா. நடராசன், எம்., டி. லிட். (ஆந்திர அரசாங்கப் பொருளாதார ஆலோசகர்) அவர்கள் ஆவர். **கிடைக்கும் இடம்:** பவானி அச்சகம், எழும்பூர், சென்னை-8. **விலை:** ரூபாய் ஒன்று.]

இந்நூல் கிடைக்கப் பெற்றோம். ஆசிரியரவர்கள் இதன்கண் கலைத்துறையில் உளத்துறையில் கணக்குத்துறையில் முதுபெரும் புலவராய் உலகுக்கு உண்மை வழிகாட்டும் தன்மையராய் இந் நூற்றாண்டிலும் கடந்த நூற்றாண்டிலும் புகழுடன் வாழ்ந்து பொன்றாப் புகழுடம்பு நிறீஇப் பேரா இயற்கைப் பெரு வாழ்வு எய்திய பெரியார் மூவரைப்பற்றி முறையே விளக்கியுள்ளார்கள். அம் மூவரும் முறையே ஐயர்லாந்தில் பிறந்து இங்கிலாந்தில் சிறந்த பெர்னாட்சா, ஸ்விட்ஸர்லாந்து நாட்டைச் சார்ந்து தோன்றி பாரிசு, வியன்னா, மீரிஸ்பர்க் என்னும் இடங்களில் சிறந்து பிறங்குவிண்ணெய்திய மெஸ்மர், செங்கோட்டையில் பிறந்து, சென்னை கல்கத்தா முதலிய இடங்களில் சிறந்து அமெரிக்கா அழைப்பின்மேல் பிரின்ஸ்டன் பல்கலைக் கழகம் செல்லும் வழியாகிய எகிப்து பாலைவனத்தில் வலவனேவும் வானவூர்தியின் கோளாறினால் இறையடி நீழல் எய்திய எஸ். எஸ். பிள்ளை என்பவராவர்.

இம்மூவர் வரலாற்றையும் சுருக்கமும் விளக்கமும் பொதுள இனிய செவ்விய செந்தமிழ் நடையில் யாத்துள்ளார்கள். இதனைக்கற்கும் மாணவரும் கற்பிக்கும் ஆசிரியரும், பெற்றோர்களும், பெருமக்களும் வாங்கிக் கற்பின் நாடும் மொழியும் நன்னெறியும் தொன்மை உண்மைப் பழக்கத்து நம்பிக்கையும் கொண்டு உழைத்து வருவதே மெய்ம்மை என உணர்ந்து நலமெய்துவர். மூடநம்பிக்கை எனவும், சைவ உணவில் என்ன இருக்கின்றது எனவும் எள்ளி நகையாடுகிறவர்களும் இதனைக் கற்பின் மெய்ம்மை யுணர்ந்து முன்னேறுவர். ஆசிரியரவர்கள் இது போன்றுள்ள உண்மை வரலாறுகள் பல எழுதித் தமிழ்த்தாய்க்கு அணிசெய்வார்களாக. தமிழன்பர்களும் ஊக்குவார்களாக.

இந்திய வரலாற்றுச் சுருக்கம்

[**ஆசிரியர்:** M. R. பெருமாள் முதலியார், M.A., L.T., M.E.S. அவர்கள்; **கிடைக்குமிடம்:** சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை **விலை:** ரூபா. 15.]

இந் நூல் W. H. மோர்லண்டு A. C. சட்டர்ஜி என்னும் இரு பேராசிரியர்களும் சேர்ந்து ஆங்கிலத்தில் எழுதிய நூலின் மொழி பெயர்ப்பாகும். இம் முயற்சி சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதனைச் செவ்விய முறையில் யாவரும் எளிதிலுணருமாறு நனிமிக உழைப்பெடுத்து மொழிபெயர்த்து இதன் ஆசிரியர் நல்கியுள்ளனர்.

இந் நூலின்கண் நாடும் மக்களும் முதலாக சமூக முன்னேற்றம் ஈறாக ஐம்பத்தாறு தலைப்புக்களில் நாடு, மொழி, மக்கள் தொன்மை, நாகரிகம், இந்திய நாட்டின் ஆதிமக்கள், வெளியிலிருந்து வந்தவர்கள், ஆட்சி முறை, வெளி நாட்டார் படையெடுப்பு, நிலம், மலை, ஆறு, எல்லை முதலியவற்றின் பல்வேறு ஆட்சியின் காலவரையறைகள், போர் முறைகள் எல்லாம் மிக நன்முறையில் கூறப்பட்டுள்ளன. இதுகாறும் இந்தியவரலாற்றினைத் தமிழ் மாணவர்களும் பெருமக்களும் ஆங்காங்கு வகுப்புக்கேற்ற முறையில் சிறுகச் சிறுக உணர்ந்து வந்தனர். எல்லாவற்றையும் ஒரு நூலின்கண் ஒருங்குணரும் வாய்ப்பில்லாமலிருந்தது. அஃதொரு பெருங்குறையே. அக் குறை இந் நூலால் முற்றும் நீங்கிவிட்டது என்னலாம். இவ்வரிய பணியை உரிய காலத்துச் செய்து முடித்த சென்னைப் பல்கலைக் கழகத்தார்க்குத் தமிழ்நாடு என்றும் பெருங்கடப்பாடு உடையதாகும். இதனை நூல் நிலையங்களும், கல்லூரிகளும், பெருமக்களும் வாங்கிக் கற்றுப் பயன் எய்துவார்களாக. ஒரு நாட்டின் உண்மை வரலாறு தெரிந்தாலன்றி அந் நாட்டு மக்கள் கிளர்ச்சியும் எழுச்சியும் கொண்டு உழைத்து நாட்டை வளம்படுத்தி ஒற்றுமையாய் அன்பும் இன்பும் எய்தி வாழ்தல் இயலாது. அங்ஙனம் வாழப் பெருந்துணை புரிவது இந் நூல். அதனால் இந் நூல் எல்லாரிடமும் இருக்கவேண்டிய தின்றியமையாதென்க. நல்ல அச்சு. அழகிய கட்டடம். பலநிறப் படம், 687 பக்கங்கள் மிளிர்கின்றன.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.

செட்டிநாட்டரசர்
உயர்திரு. மு. அண்ணாமலைச்செட்டியாரவர்கள்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அமைத்த வள்ளலார்



இராசா சர். மு. அ. முத்தையச்செட்டியார் அவர்கள்

அண்ணாமலைப் பல்கலைக்கழக இணைவேந்தர்

உயர்திரு. சர். சி. பி. இராமசாமி ஐயரவர்கள்
அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்



அண்ணமலைப் பல்கலைக்கழகக் கட்டிடங்கள்